பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 25 சனிக்கிழமை (08.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :132

# திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் நேற்று சுட்டுப் படுகொலை!

## அதி உயர் பாதுகாப்புப் பிரதேசத்திற்குள் வந்து கொடூரம் புரிந்து விட்டு ஒட்டுப்படை தப்பியது



திருகோணமலை,ஏப்ரல் 8

**திருகோணமலையில் தமிழ் மக்களுக்காகவும், தமிழ்த்தேசியத்துக்காகவும் துணிச்சலோடு குரல் எழுப்பிவந்த திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவைத் தலைவரும் வங்கி அதிகாரியுமான வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் (வயது - 51), நேற்றுக்காலை திருகோணமலை உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் உள்ள தமது வங்கியின் அலுவலக வாசலில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.**

இலங்கை வங்கி திருகோணமலைக் கிளையில் நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றிய விக்னேஸ்வரன் நேற்றுக்காலை திருகோணமலை பிரதான வீதியிலுள்ள தமது அலுவலகத்திற்குக் கடமைக்குச் சென்றுகொண்டிருந்தபோது வங்கியின் நுழைவாயிலுக்கு அருகில் வைத்தே துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார்.

மோட்டார் சைக்கிளில் வந்து காத்திருந்த நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் விக்னேஸ்வரன் அதே இடத்தில் உயிரிழந்தார். அவரின் தலையில் மூன்று ரவைகள் பாய்ந்திருக்கின்றன.



விக்னேஸ்வரனின் சடலம்

திருகோணமலையின் உயர் பாதுகாப்பு பிரதேசத்திற்குள் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பது திருமலை மாவட்டத் தமிழர்களைப் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

இந்தச் சம்பவம் இடம் பெற்ற இடத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் வீதித்தடையுடனான பொலீஸ் சோதனைச் சாவடியொன்றும், இந்தச் சோதனைச் சாவடியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் கடற்படையினரின் சோதனைச் சாவடியொன்றும், அடுத்த 50 மீற்றர் தூரத்தில் துறைமுகப் பொலீஸாரின் சோதனைச்சாவடியொன்றும் உள்ளன.

துப்பாக்கியால் சுட்டு விக்னேஸ்வரனைக் கொன்றபின்னர் கொலையாளிகள் இந்த மூன்று சோதனைச்சாவடிகள் ஊடாகவும் எவ்வாறு தப்பிச்சென்றனர் என்பதே, மக்களுக்குப் பெரும் வியப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற நீண்ட நேரத்தின் பின்னர் படையினர் சம்பவ இடத்திற்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அதிர்ச்சி,கடும் கண்டனம் கண்காணிப்புக் குழுவுக்கு கடிதம்

கிளிநொச்சி,ஏப். 8

திருமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் படுகொலை குறித்து விடுதலைப் புலிகள் அதிர்ச்சியும் கடும் கண்டனமும் வெளியிட்டிருக்கின்றனர்.

தமது கண்டனத்தை வெளிப்படுத்தும் கடிதம் ஒன்றை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அனுப்பியிருக்கின்றார் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்த் தேசியப் பற்றாளரும் மனித

(16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஏப்.8

தமிழ்த்தேசியப் பற்றாளரும் திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவருமாகிய வன்னியசிங்கம் விக்னேஸ்வரனின் மறைவை ஒட்டி குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிக்குமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் ஓர் அறிக்கையில் கேட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- (16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலும் துக்கம்

கிளிநொச்சி,ஏப்.8

திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரனின் உடல் அடக்கம் செய்யப்படும் வரை கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு சோக கீதம் இசைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை கேட்டிருக்கின்றது.

அனைத்து அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், இல்லங்கள் மற்றும் பொது இடங்களில் கறுப்புக் கொடிகளைக் பறக்க விடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)(22)

## விக்னேஸ்வரன் கொலையால் கடுஞ் சீற்றமுற்ற தமிழ் எம்.பிக்கள் சபை அமர்வைக் குழப்பினர்!

### அதனால் அவசரகாலச் சட்டம் அவசர அவசரமாக நிறைவேற்றம்

கொழும்பு, ஏப்.8

திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ. விக்னேஸ்வரன் நேற்றுக் காலை படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து நேற்றுத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அல்லோலகல்லோலப் படுத்தினர்.

இதனால், சபை நடவடிக்கைகள் முற்றாக முடக்கப்பட்டன.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட - அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் - பிரேரணை விவாதிக்கப்படாமலேயே கூச்சல் குழப்பத்துக்கு மத்தியில் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது.

அதேவேளை, சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கமுடியாத நிலைமை தோன்றியதால் நாடாளுமன்றத்தை மே மாதம் 9ஆம் திகதிவரை சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் கூடியது. நேற்றைய விவாதத்திற்குரிய விடயமாக பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து அது மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொது அமைப்புகள் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.8

திருமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரனின் படுகொலைச் சம்பவத்தை பல அமைப்புகள் கண்டித்திருக்கின்றன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம், வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஆகியனவும் கண்டன அறிக்கைகளை விடுத்துள்ளன. (ஐ)(22)

## திருமலையில் கதவடைப்பு

திருமலை,ஏப்.8

திருகோணமலையில் நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரனின் இறுதிக்கிரியைகள் முடிவடையும் வரை முழுமையான கதவடைப்பு நடத்தி, துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறு திருகோணமலையில் தலைநகர் தமிழ் மக்கள் பேரவை நேற்று அறிவித்திருக்கிறது.

இது தொடர்பில் நேற்று தலைநகர் தமிழ் மக்கள் பேரவை அறிக்கையொன்றை விடுத்திருக்கிறது.

இக்கொலையை ஒட்டுப்படையினரே மேற்கொண்டனர் என அது சாடியிருக்கிறது.(ஐ-க)

## தமிழீழம் - எங்கள் தாய் நாடு இந்தியா - எங்கள் தந்தை நாடு

### 'ஆனந்த விகடன்' பேட்டியில் மதியுரைஞர் பாலா

சென்னை,ஏப்.8

தமிழீழத்தை தாய் நாடாகப் பார்க்கும் நாங்கள் இந்தியாவை தந்தை நாடாகவே பார்க்கின்றோம்.

புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் மத்தியில்நல்ல நட்புறவு ஏற்படவேண்டும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அப்படியான ஒரு சூழ்நிலை நிச்சயம் விரைவில் ஏற்படும் என்பதுதான் எனது கருத்து.

தமிழகத்தில் வெளியாகும் 'ஆனந்த விகடன்' சஞ்சிகைக்கு வழங்கிய ஒரு நேர்காணலில் இப்படித் தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தமது லண்டன் இல்லத்தில் வைத்து தமிழகச் சஞ்சிகையான 'ஆனந்த விகடன்' வார இதழுக்கு சிறப்புச் செவ்வி ஒன்றை வழங்கினார்.

டி. அருள்செழியனுக்கு அவர் வழங்கிய பேட்டியின் முதல் அத்தியாயம் 'பிரபாகரன் தந்த சயனைட் குப்பி' என்ற தலைப்பில் தற்போது பிரசுரமாகியுள்ளது. *(பேட்டியின் முழு விவரம் பின்னர் வெளியாகும்)*

(ஐ)(22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

யாழ். பொது நூலகத்தில் கூடியிருந்தோர் மத்தியில் ஆத்மீகக் குரு ரவிசங்கர் உரை

# கவலை குடிகொண்ட முகங்களையே இங்கு எல்லோரிடமும் காண்கிறேன்

## வாழும் கலைப் பயிற்சிகள் மூலம் மன இறுக்கத்திலிருந்து விடுபடுங்கள்


பொது நூலகத்தில் ரவிசங்கர்...

யாழ்ப்பாணம்,ஏப்.8

இங்கு எல்லோருடைய முகங்களிலும் கவலை குடிகொண்டிருப்பதைக் காண்கின்றேன். வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்கள் உங்களை விடவும் அதிகம் கவலை கொண்டிருப்பதை உணர்ந்துள்ளேன். நீங்கள் வாழும் கலைப் பயிற்சி நிறுவனத்தின் இலேசான பயிற்சிகள் மூலம் மனதின் கவலைகளையும் துயரங்களையும் விலக்கிக் கொள்ள முடியும்.

- இப்படித் தெரிவித்தார் உலக ஆன்மீக குருவான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி.

உலக ஆன்மீகக் குரு ரவிசங்கர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தார். ஆத்மீக நெறி பரப்பும் நோக்கில் இலங்கையில் சுற்றுப் பயணம் ஒன்றை ஆரம்பித்து நேற்றுமுன்தினம் கொழும்பை வந்தடைந்த அவர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

வாழும் கலைப் பயிற்சி நிறுவனம் மற்றும் மனித மாண்புகளுக்கான சர்வதேச நிலையம் என்பனவற்றின் நிறுவுநரான ரவிசங்கர் நேற்று மாலை யாழ். பொது நூல்நிலையத்தின் கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆத்மீக ஆர்வலர்களையும் பிரமுகர்களையும் சந்தித்தார்.

ஆத்மீக நெறி தொடர்பாகவும், மனதை ஒருநிலைப்படுத்துவது பற்றியும் ரவிசங்கர் அப்போது விளக்கம் அளித்தார். கேள்விகளுக்கும் விடை தந்தார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வாழும் கலைப் பயிற்சி நிறுவனத்தின் கிளையில் சேவை புரியும் ரவிசங்கரின் தொண்டர்கள் இந்தச் சந்திப்பை ஒழுங்குசெய்திருந்தனர்.

கல்விமான்கள், தொழிற் பிரமுகர்கள் மற்றும் வாழும் கலைப்பயிற்சி நிறுவனத்தின் யாழ். கிளையில் பயிற்சிகளை தொடர்ந்து வரும் ஆத்மீக நெறி ஆர்வலர்கள் உட்பட ஏராளமானோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஆத்மீகக் குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி ஆத்மீகநெறி குறித்து விளக்கமளிக்கையில் கூறியதாவது:-

உங்கள் ஒவ்வொருவரது மனங்களிலும் கவலை குடிகொண்டிருப்பதை உங்கள் முகங்களைப் பார்த்து என்னால் ஊகிக்க முடிகிறது.

வாழும் கலைப்பயிற்சி நிறுவனம் கற்றுத் தரும் பயிற்சிகளின் மூலம் நீங்கள் உங்களது மன இறுக்கத்தினின்றும் விடுபட இயலும். இப்பயிற்சி சிரமமானதொன்றல்ல. மிக மிக இலேசான பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் மனதின் கவலைகளையும் துயரங்களையும் விலக்கிக் கொள்ளமுடியும்.

ஆன்மீகமும் விஞ்ஞானமும் சேர்ந்ததே இன்றைய மனித வாழ்க்கை. இவற்றில் ஒன்றைக் கைவிடுவதனால் கூட வாழ்க்கை பூரணமாகாது. மனிதர்கள் கவலை, துக்கம் என்ற உணர்வுகளிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்பதே எமது விருப்பம். அதற்காக வழிகாட்டும் நோக்கிலேயே நாம் இத்தகைய பயிற்சிநெறிகளைப் போதித்து வருகிறோம்.

இன்று ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்களில் 27 விகிதமானோர் மன அழுத்தத்துக்கு உட்பட்ட நிலையிலேயே வாழ்கின்றனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)


வேம்படி மாணவிகளின் காவடி ஆட்டம்


பூரண கும்பம்வைத்து குருஜிக்கு வரவேற்பு...


ஆராத்தி எடுத்து வரவேற்கப்பட்டபோது...



யாழ். இந்து மைதானத்தில் திரண்ட ஆத்மீக ஆர்வலர்கள்.


மாலை அணிவித்து ஆசி பெறுகிறார் பெண் ஒருவர்

# கண்காணிப்புக் குழு முன்னாள் தலைவரின் கூற்றுக்கு தவறான முறையில் வியாக்கியானம்!

## குமுறுகிறார் அவர்

கொழும்பு,ஏப்.8

பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொறுப்பைத் தட்டிக்கழித்து பிறர் மீது பழியைப் போடாமல், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட முன்வரவேண்டும் என்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவிக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தாம் நடத்திய சந்திப்பில் பேசப்பட்ட பல விடயங்கள் தவறான முறையில் பத்திரிகையொன்றில் பிரசுரமாகியுள்ளது.

அந்தத் தவறான கூற்றுகளை திருத்தக் கோரி அவர் அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு நீண்ட கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை நான் மார்ச் 23ஆம் திகதி சந்தித்தபொழுது புலிகளை 'விடுதலைப் போராளிகள்' என்று 'லேபல்' குத்திப் பேசினேன் என இக்பால் அத்தாஸ் என்ற பத்திரிகையாளர் கடந்த வார 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் 'கள நிலைவர அறிக்கை'ப் பக்கத்தில் எழுதியிருக்கிறார். நான் ஒருபோதும் புலிகளை இத்தகைய சொற்றொடர்களைப் பிரயோகித்து வகைப்படுத்தியது கிடையாது. இவ்வாறு வகைப்படுத்தும் தேவையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

''அத்தாஸின் இந்த மேற்கோள் கூற்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது மட்டுமல்ல, பல்வேறு அரசியல்வாதிகளாலும் இந்தக் கூற்று மேற்கோள் காட்டிப் பேசப்பட்டும் வருகிறது. இது போன்ற பொய்யான கூற்றுகளை எழுதுவது, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மீது பாரதூரமான தாக்கத்தை மட்டும் ஏற்படுத்துவதோடு நின்றுவிடாது முழு சமாதான முயற்சிகளுக்கும் கூட பாரதூரமான தாக்கத்தை விளைவித்து விடும். இது அத்தாஸின் கட்டுரையில் எடுத்தாளப்பட்ட முதலாவது பொய்க் கூற்றாகும்.

''அடுத்து இரண்டாவதாக இக்பால் அத்தாஸ் தனது கட்டுரையில், பாதுகாப்புச் செயலாளருடன் நடந்த அதே சந்திப்பின்போது ஆயுத மோதல் ஒன்று வருமிடத்து, விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவப் படையினரால் வெற்றிகொள்ளமுடியும் என்று நான் நினைக்கவில்லை என்று நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குச் கூறினேன் என எழுதியிருக்கிறார். இது நான் அந்தச் சந்திப்பின்போது பேசியவற்றை சந்தர்ப்ப சூழ்நிலைக்குப் புறம்பான சூழ்நிலையில் வைத்து தமக்குப் பிடித்தமான முறையில் எடுத்தாளப்பட்டிருப்பதாகவே உள்ளது. நான் அந்த வார்த்தைகள் மூலம் என்ன சொல்ல வந்தேன் என்பதை அத்தாஸ் முற்றாகவே புறந்தள்ளத் தீர்மானித்திருக்கிறார். இங்குள்ள முரண்பாட்டுக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகும் என்று நான் நம்பவில்லை. இலங்கையில் நான் கண்ட அனுபவத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்பொழுது, இலங்கை அரசுக்கு எதிரான போரில், வெற்றிவாகை சூடுவதற்கான இராணுவ வலிமை புலிகளிடம் இருப்பதாகவோ, அதேபால் விடுதலைப் புலிகளை யுத்தத்தில் வெற்றிகொள்வதற்கான வலிமை இலங்கை அரசிடம் இருப்பதாகவோ தெரியவில்லை என்பதே எனது அபிப்பிராயமாகும். இதனையே நான் அந்த சந்திப்பின்போது கூறினேன்.

''சந்திப்பின்போது நான் கூறிய இக்கூற்றுகள் எனது சொந்தக் கருத்து மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தினதுமாகும். ஆயுத மோதலில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும், அத்தகைய ஆயுத மோதல்கள் இலங்கையின் சமகாலப் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வையும் தந்துவிடாது என்றும் சர்வதேச சமூகம் தெட்டத்தெளிவாகக் குரல் கொடுத்தே வந்தி ருக்கிறது.

''குறிப்பிட்ட இந்தச் சந்திப்பு அமர்வின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பங்களிப்போடு, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்ஸனின் பங்களிப்பும் இருந்தது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு, நோர்வே அனுசரணையாளர்கள் ஆகியோர் மீது மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தின் மீதும் கோபக்கனல் கொண்டவராகவே இருந்தார். இந்த முரண்பாடுகளுக்கு இணக்கத் தீர்வொன்றையும் அடைய முடியாமல் இருப்பது குறித்து இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மீதும், சர்வதேச சமூகத்தின் மீதும் பழியைப் போட்டுக் குறை கூறினார். இந்த சந்திப்பின்போது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தாமே சர்ச்சைக்குரிய பல கூற்றுக்களைக் கூறினார். அவரது இந்தக் கூற்றுகள் அதிரவைக்கும் கொந்தளிப்பு நிலைமைகளை தோற்றுவிக்கக்கூடியவையாகவும் இருந்தன. அவரது இந்தக் கூற்றுகள், இலங்கை அரசின் உத்தியோக பூர்வமான நிலைப்பாட்டை பிரதிபலிப்பனவையாக இருக்கமாட்டா என்பதே எனது நம்பிக்கையாகும்.

''இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை ஆவணமானது, சமாதானத்தைப் பேணுவதற்காக, சம்பந்தப்பட்ட இரு தரப்பாரினதும் விருப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே, சமாதானத்தை எட்டுவதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட அந்த இரு தரப்பாரையும் பொறுத்த தேயாகும். அத்தோடு அந்த சமாதானத்துக்கு சர்வதேச சமூகம் நோர்வேயின் அனுசரணை, யுத்தநிறுத்த கண்காணிப்பு குழு ஆகியவற்றின் உதவியும் பெறப்பட்டதாயிருக்க வேண்டும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக் குரலை நசுக்கும் நயவஞ்சகச் சதிச்செயல்

ஒட்டுப்படைகளின் மற்றொரு அட்டூழியம் திருகோணமலை நகரில் நேற்றுக்காலை அரங்கேறியிருக் கின்றது.

தமிழ்த் தேசியத்தின் மற்றொரு குரல் துப்பாக்கி முனையில் அடக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர் தாயகத்தின் தலைநகரத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடூரங்களை - கொடுமைகளை - அடக்குமுறைகளை - சர்வதேசத்தின் முன்கொண்டு வந்து நியாயம் கேட்க வழிசெய்த 'குற்றத்துக்காக' செய்தி யாளர் எஸ்.எஸ். ஆர். (சுகிர்தராஜன்) படுகொலை செய் யப்பட்ட அதிர்ச்சி அடங்குவதற்குள் - அதேபாணியில் - அடுத்த ஓர் அவலம் இழைக்கப்பட்டிருக்கின்றது.

திருகோணமலையை சிங்களமயப்படுத்தி, தமிழரின் தாயகமான வடக்கு, கிழக்கைத் துண்டாடும் பேரினவாதத்தின் சதி, நாசகாரத் திட்டத்தை அஞ்சாமல் அம்பலப்படுத்திய துணிச்சலுக்காக திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் சன்னங்களினால் துளைக்கப்பட்டு தீர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றார். அதுவும் சிங்களப் படைகள் செறிவாக நிலை கொண்டிருக்கும் உயர் பாதுகாப்புப் பிரதேசத்துக்குள் வைத்து அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு கொலையாளிகள் அநாயாசமாகத் தப்பிச் சென்றிருக்கிறார்கள்.

பௌத்த, சிங்கள மேலாதிக்க வெறிக்கு அடங்க மறுத்த ஒரு மறத்தமிழன், அந்த மாண்புக்காக மரணத்தை அரவணைத்திருக்கிறான்.

பௌத்த சீலம் போதித்த புத்தரையே பேரினவாதச் சின்னமாக்கி, திருகோணமலையை பேரினவாதத்தின் பூமியாக்க சிங்கள அரசின் ஆதரவோடு எடுக்கப்பட்ட முயற்சிகளை - அஞ்சாமல் அப்பட்டமாக வெளிப்படுத்தி, திருகோணமலைத் தமிழ் சமுதாயத்தின் குரலாக ஒலித்தவர் விக்னேஸ்வரன்.

சிங்கள மொழித் திணிப்பு, திருகோணமலையில் எந்த வடிவத்தில் வந்தபோதும் அதனை புள்ளி விவரங்கள் மற்றும் விரிவான தகவல்களோடு சர்வதேச சமூகத்துக்குக் கொண்டு வரும் அவரது திறமை பேரினவாதிகளை கடும் எரிச்சலுக்குள்ளும், விசனத்துக்குள்ளும், ஆத்திரத்துக்குள்ளும் ஆழ்த்தியிருந்தன என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

தமிழர் தாயகத்தில் பேரினவாதிகளின் நில ஆக்கிரமிப்பு, மொழித்திணிப்பு, வேலைவாய்ப்புப் பறிப்பு, மூலவளச் சூறையாடல் என்ற பல்வேறு அம்சங்களை உரிய புள்ளி விவரங்களோடு அம்பலப்படுத்தியதன் மூலம் திருகோணமலையில் பேரினவாதத்தின் கொடூரங்களை உலகறிய வைத்தார். அதைப் பொறுக்க முடியாத பேரினவாதம் தனது அரூபக்கரங்கள் மூலம் தன் 'திருவிளையாடலை' காட்டியிருக்கின்றது.

தமிழர்களின் சுதந்திரத்துக்கான அபிலாஷையை - மனவிருப்பத்தை - எதிர்பார்ப்பை - உலகுக்கு எடுத்துக்காட்டும் நிகழ்வுகளாக தமிழர் தாயகம் எங்கும் நடத்தப்பட்ட 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சிகளில் உணர்வு பூர்வமாகப் பங்கேற்று, அந்நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி, தமிழ் எழுச்சிப் பிரகடனங்களை பறைசாற்றியவர் விக்னேஸ்வரன்.

உரிமைக்கான போர் என்ற வேள்வியில் உயர் தற்கொடையாகத் தம்முயிரையே வழங்கி, விடுதலை வேட்கைக்கு உரமும் உயிரும் ஊட்டியிருக்கின்றார் அவர்.

ஒருபுறம் தமிழர்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்ட சக்தி வலுப்பெற, மறுபுறம் அதற்குப் பின்புலமாகவும், ஊக்க சக்தியாகவும் தமிழ் இன வெகுஜன எழுச்சியை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் பெருவெற்றி கண்டவர் விக்னேஸ்வரன். உச்ச அடக்குமுறை, அளவு கடந்த ஆயுதப்படைகளின் பிரசன்னம், எல்லை மீறிய கெடுபிடிகள், நெருக்குவாரங்கள் போன்றவற்றுக்கு மத்தியிலும் திருகோணமலைத் தமிழர்களை ஒன்றுபட்ட சக்தியாக - ஒரு குரலாக - அமரர் விக்னேஸ்வரனும் அவர் சார்ந்தோரும் எவ்வாறு ஐக்கியப்பட வைத்திருந்தார்கள் என்பதற்கு நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் நல்ல சான்று.

திருகோணமலை நகரத்தையே தனது கொடூரப்பிடி மூலம் விழுங்குவதற்கு பேரினவாதம் சந்நதம் கொண்டு நிற்கையில், திருகோணமலை நகரசபைக்கான தேர்தலில் பேரினவாதி ஒருவர்கூட உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு இடமளிக்காமல், தமிழர்களின் ஏகத்துவம் மூலம் வாக்குச்சீட்டுகள் வாயிலாக - பௌத்த சிங்கள மேலாண்மைப் போக்குடையோரை ஓரங்கட்ட வைத்ததில் விக்னேஸ்வரனின் பங்கு அளப்பரியது.

இனத்துக்கான வீரமரணம் என்ற இந்த உயர்ந்த பரிசை இனவாதிகள் அவருக்கு அளித்தமைக்கு ஒரே காரணம் தமிழர்களின் தேசியக் குரலாக அவர் ஒலித்ததுதான்.

தமிழர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்த மிதவாதத் தலைவர் ஜோஸப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை போலவே, அவரது வழி தொடர்ந்த விக்னேஸ்வரனும் கொடூரமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்.

அவர்களுக்கு எதிரிகளால் கொடுக்கப்பட்ட இந்தப் பரிசு, எதற்காக அவர்கள் குரல் கொடுத்தார்களோ அதை நோக்கிய பயணத்தில் தமிழர்களை இன்னும் தீவிரமாக - வேகமாக - உறுதியோடு - முன் நகர்த்துவதற்கு உந்து சக்தியாகவும் ஊக்க சக்தியாகவும் அமைகிறது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

# கடத்தப்பட்ட மனித நேயப் பணியாளர்களை விடுவிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுங்கள்!

## அரசிடம், ஜனாதிபதியிடமும் உறவினர்கள் உருக்கமான வேண்டுகோள்

கொழும்பு ,ஏப்.8

வெலிகந்தைப் பகுதியில் துணைப் படைகளால் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனித நேயப் பணியாளர்களான எமது உறவினர்களை விடுதலை செய்வதற்காக அரசும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு கடத்தப்பட்ட புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் வலியுறுத்தினர்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைமையகத்தில் வைத்தே மேற்கண்டவாறு அவர்கள் வலியுறுத்தினார்கள். அங்குஇடம்பெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பில் அந்த உறவினர்கள் கண்ணீர் மல்க உருக்கத்துடன் தெரிவித்ததாவது: -

கடந்த ஜனவரி மாதம் 29,30ஆம் திகதிகளில் எமது உறவினர்கள் கடமையின் நிமித்தம் பயணித்துக் கொண்டிருக்கும்போது பொலன்னறுவை, வெலிக்கந்தைப் பகுதியிலுள்ள இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து இனந்தெரியாத ஆயுதக்குழுவினால் கடத்திச் செல்லப்பட்டனர். அவர்கள் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை.

எமது உறவினர்களை விடுவிக்கக் கோரி இந்த விடயத்தை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் அமையத்தின் அபிவிருத்தி நிறுவனங்கள், வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளோம். இருப்பினும் இன்று வரை அவர்கள் தொடர்பாக எந்தவொரு தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை- கிடைப்பதற்கான நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட அமைப்புகள் எதுவும் ஈடுபடுவதாகவும் தெரியவில்லை.

எமது உறவினர்கள் கடத்தப்பட்டு 66 நாள்கள் ஆகின்றன. இந்த 66 நாள்களில் 55 நாள்கள் அலைந்துதிரிந்து எமது வாழ்வை வாகனங்களிலேயே கழித்துக் கொண்டிருக்கிறோம்.

இவ்வளவு இன்னல்களுக்கு மத்தியிலும் நாங்கள் பல அமைப்புகளிடம் முறையிடவும், அவற்றிடமிருந்து எமது உறவினர்கள் தொடர்பாகத் தகவலறியவும் அலைந்துவருகிறோம்.

ஆனால், அந்த நிறுவனங்கள் ஆறுதலுக்காக சில ஆறுதல் வார்த்தைகளையே கூறுகின்றன.

*'உங்கள் உறவினர்கள் உயிரோடுதான் இருக்கிறார்கள். இது ஓர் அரசியல் தந்திரமாகும். நாங்கள் தேடுதல் நடத்திக்கொண்டுதான் இருக்கிறோம். அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஒரு குழுவொன்றையும் தேடுதல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தியுள்ளார். கூடிய விரைவில் உங்கள் உறவினர்களை பாதுகாப்பாக கொண்டு வந்து சேர்ப்போம். ஆனால், ஜெனீவாப் பேச்சின் பின்னரே எம்மால் இதனை மேற்கொள்ள முடியும்'* என்றார்கள்.

எமக்கு ஒன்றுமே விளங்கிக்கொள்ள முடியவில்லை. அத்தோடு, செஞ்சிலுவைச் சங்கம் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. தங்களையே பாதுகாக்க யாருமில்லை என்கிறார்கள் அவர்கள். இருப்பினும் எமது உறவினர்களை விடுவித்துக் கொள்வதற்காக இராணுவக் கட்டுப்பாட்டுபகுதியானவெலிகந்தை சேனைபுரம் பகுதிக்கு நாங்கள் சென்றோம். அங்கு ஆயுதக்குழு உறுப்பினர்கள் சிலர் இருந்தனர். அவர்களிடம் நாங்கள் மன்றாடினோம். ஆனால், அவர்கள் 'நாங்கள் யாரையும் கடத்தவுமில்லை. நீங்கள் குறிப்பிடும் நபர்கள் யார் என்றே எமக்குத் தெரியாது' என்றனர். அதற்கு மேல் எதிர்ப்புக் காட்டி எந்தவித நடவடிக்கையும் எம்மால் மேற்கொள்ள முடியாது என்பதால் கண்ணீருடனே திரும்பினோம்.

நாங்கள் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். எமக்குப் பொறுப்பான குடும்பத் தலைவர்களின் வருமானத்தைக் கொண்டே குடும்பத்தை நடத்தி வந்தோம். அவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். அவர்களை எண்ணி நாளாந்தம் பரிதவிக்கிறோம். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சமூக நலனை நோக்கமாகக் கொண்டே செயற்படுகின்றது.

இது பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னின்று பணியாற்றிவரும் அமைப்பாகும். போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான இல்லங்கள், முதியோர் இல்லங்கள், குடும்பத்தலைவர்களை இழந்த பெண்களுக்காக உதவித் திட்டங்கள், வைத்திய வசதிகள் வழங்கும் நிலையங்கள் அமைத்து உதவிகளை வழங்கும் அமைப்பாகும்.

இருப்பினும் சமூக நலனை நோக்காகக் கொண்டு பணியாற்றும் எமது உறுப்பினர்கள் எந்தவொரு ஆயுதக்குழுவுடனோ அல்லது இயக்கங்களுடனோ தொடர்பு கொண்டவர்களல்லர். ஆயினும் அப்படியானோர் ஏன் கடத்தப்பட்டனர் என்பது எமக்குத் தெரியாத புதிராக இருக்கிறது.

எமது குடும்பத்தின் இன்னல்களைப் போக்கும் வகையில் மனிதநேயப் பணியில் ஈடுபட்டுவரும் எமது உறவினர்களை விடுவிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை அரசு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் உள்நாட்டு, சர்வதேச அமைப்புகள் எடுக்கவேண்டும் - என்றனர். (க)

# மாவை.இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு பங்குனித்திங்கள் திருவிழாவுக்குச் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.8

உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கு பங்குனித்திங்கள் திருவிழாவிற்கு பக்தர்கள் சென்றுவருவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். பங்குனித் திங்கள் உற்சவதினமான நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை அபிஷேகம், பொங்கல், குளிர்த்தி, திருவிழா என்பன இடம்பெறும். பங்குனித்திங்களை முன்னிட்டு உற்சவத்தில் கலந்து கொள்ளச் செல்லும் பக்தர்கள் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சைக்கிள், மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்களில் ஆலயத்திற்குச் செல்ல முடியும் என்று படையினர் அறிவித்துள்ளனர் என்றும் - நண்பகல் 12 மணிக்கு திருவிழா நடைபெறும் என்றும் - ஆலய அர்ச்சகரும், நிர்வாகத்தினரும் அறிவித்துள்ளனர். (எ-203)

# புதுவருடத்தை முன்னிட்டு வேம்படி மகளிரில் இன்று முதல் 4 தினங்கள் வர்த்தகக் கண்காட்சி

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் வர்த்தகக் கண்காட்சி இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

கண்காட்சியின் ஆரம்ப வைபவம் இன்று காலை 9மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஆர். ஜனக்குமார், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்வர். 'ட்றீம் சொலூசன்ஸ்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை காலை 9 மணிமுதல் மாலை 7 மணிவரை இந்தக் கண்காட்சி இடம்பெறும். கணனி நிலையங்கள், விளம்பர நிலையங்கள், 'சீ.டி'க்கள், புத்தகங்கள், டிஜிற்றல் உலகம், தளபாடங்கள், தமிழ் எஸ்.எம்.எஸ். கணனி விற்பனை உட்பட 25 வகையான காட்சியறைகள் இந்தக் கண்காட்சியில் இடம் பெறும் என்று தெரிக்கப்பட்டது.


(எ-202) (27)

### நாளை

பங்குனி 26
ஞாயிற்றுக்கிழமை
09.04.2006
திதி : ஏகாதசி
பிற்பகல் 03.15
நட்சத்திரம் : மகம்
பின்னிரவு : 02.52
சுபநேரம் : 09.07 - 10.37
ராகுகாலம் : 04.37 - 06.07
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அதிர்ஷ்ட சக்கரம் ஒரே இடத்தில் ஒரு போதும் இரண்டாம் தரமும் தரித்து நிற்பதில்லை. இளந்த சந்தர்ப்பங்கள் திரும்பி வரவே செய்யாது. - *ஜெம்ஸ் லீகா.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

யாழ்.நகரில் இயங்கும் நிலையிலுள்ள அரைக்கும் ஆலை விற்பனைக்குண்டு. தொடர்பு: 771, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9955846 (49054)

தரமான NO.1 Prima பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48714)

நல்ல நிலையிலுள்ள MD 90 விற்பனைக்குண்டு. தொடர்பு: சபா.யோகசிங்கம், அச்சுவேலி. T.P.: 021 - 2263418 (49079)

## காணி விற்பனைக்கு

நல்ல சூழலில் விவசாயம் செய்யக்கூடியதும் குடியிருக்கக் கூடியதுமான 4½ பரப்புக்காணி திருநெல்வேலி, இராச வீதிக்கருகாமையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 3114495, 0777 286175 (49073)

நுணாவில் கிழக்கு, A9 வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 071 4269831 (49071)

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைதியான சூழலில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை). தொடர்பு: Rajith, T.P.: 077 6510361 (49108)

## வீடு விற்பனைக்கு

சூராவத்தை, சுன்னாகத்தில் 6 பரப்புக் காணியுடன் சகல வசதியும் உடைய வீடு விற்பனைக்குண்டு. வான் பயிர்களும் உண்டு. தொடர்பு: 021 222 5278, 060212762. சூராவத்தை, சுன்னாகம். (49068)

கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாயில் சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: P.கமலநாதன், கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.(49097)

## கார் விற்பனைக்கு

நிசான் சனி 13-XXX தொடர் இலக்கமுடைய 'புள் ஏப்சன்' கோல்ட் கலர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.55, கோயில் வீதி, சுண்டுக்குளி. T.P.: 0777 064467 (49019)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் இன 55 நாள்கள் நிரம்பிய பூச்சிமருந்து கொடுக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்ட பதிவுப் புத்தகத்துடன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: கிஷானி அலுமினியம் தொழிற்சாலை, மாவத்தை வீதி, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. T.P.No: 077 6549608 (49083)

கிரட்டேயன் நாய்க்குட்டிகள், அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K. Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (49094)

## இமயம் - நாடக நூல்

சாகித்தியப் பரிசும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பரிசும் பெற்றது. மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான பத்து நவீன நாடகங்கள் கொண்டது. கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. (49067)

## தவறிவிட்டது

செபமாலை ஜெயக்குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 641941646V பேர்ஸுடன் 767, இ.போ.ச பஸ் வண்டியில் பருத்தித்துறைக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 6910536 தொலைபேசி இலக்கத்துடன் அல்லது கனன் போட்டோ கொப்பியர்ஸ், பருத்தித்துறை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (49100)

## வாடகைக்கு

யாழ்.நகர மத்தியில் பெரிய கடையில் மாடிக் கட்டடத்தின் கீழ்ப்பகுதி மட்டும் (750 சதுர அடி) குத்தகைக்கு விடப்படும். சகல விதமான மொத்த, சில்லறை வியாபாரங்களுக்கும் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் ஏற்றது. தொடர்பு: 0777 311169 (49085)

பருத்தித்துறையில் இரண்டு பெரிய வீடுகள் வாடகைக்குண்டு. அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 021222 6923, 021 222 3537 (49072)

## வீடு வாடகைக்கு

நல்லூர், செட்டித்தெருவில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. நாள் வாடகைக்கும் திருமண வைபவங்களிற்கும் வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கும் வழங்கப்படும். தொடர்பு: 077 3186842 (49059)

## வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார் சைக்கிள் என்பன SELF - DRIVE வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் சாரதி அனுமதிப் பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360, பிரதான வீதி, (பஸ்தியான் சந்திக்கு அருகில்). T.P.: 021 222 9154, 0777 593722 (48823)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977ஆம் ஆண்டு பிறந்த, அவிட்ட நட்சத்திர செவ்வாய் தோஷமற்ற, வெளிநாட்டு நிறுவனத்தில் நல்ல பதவியில் இருந்து சாட்டட் எக்கவுண்டன் படித்துக் கொண்டிருக்கும் 6 அடி உயரமுள்ள, சிவந்த, அழகிய, நற்குணமுள்ள மணமகனுக்கு படித்த, அழகிய, குணமான லண்டன், ஆஸ்திரேயாவில் பிரஜாவுரிமை உள்ள மணமகள் தேவை. தொடர்பிற்கு: விளம்பர இல. 2846, மே/பா உதயன். (49110)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தும்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48695)

## மதுவிலக்குக் கோரி குருநகரில் பேரணி

மதுவிலக்கை வலியுறுத்தியும் அதிகரித்து வரும் மதுபான விற்பனை நிலையங்களை நிறுத்தக் கோரியும் குருநகர்ப் பிரதேச மக்களால் அமைதிப் பேரணி நேற்று முற்பகல் முன்னெடுக்கப்பட்டது.

குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றிலில் ஆரம்பமான இப்பேரணி முற்பகல் 9.30 மணிக்கு யாழ். செயலகத்தை வந்தடைந்து யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

மதுவிலக்கு தொடர்பான சுலோக அட்டைகளுடன்இடம் பெற்ற இப்பேரணியில் குருநகர்ப் பிரதேச மக்கள், பாடசாலை மாணவர்கள் பொது அமைப்புகள், கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (3-30) (24)

## அபராதம் விதிப்பு

சட்டவிரோதமாக மதுபான விற்பனையில்ஈடுபட்டது என்ற குற்றச்சாட்டின் பேரில் பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கத்திற்கு யாழ். நீதிமன்றம் 11 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

தாவடியில் இயங்கும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டிருந்த கூட்டுறவுச் சங்க நிறுவனத்தினரை நேற்று முன்தினம் கோப்பாய் பொலீஸார் கைது செய்து யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு 6 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 5 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறும் உத்தரவிட்டார். (3-14-190)(24)


## Organ/violin Notes

200 சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள், Keyboard exercise, Theory கேள்வி ஞானம் ஆகியன விற்பனையாகின்றன.

**Karaweena Isai Manram,**
131, Temple Rd, Nallur.
T.P.: 071 3055991, 0777 031293
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m தெற்கே) (49012)(32 15 16)

## தேவை

மோட்டார் சைக்கிளில் சென்று பேனாக்கள் விற்பனை செய்வதற்கு கீழ்வரும் நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை (Sales Reb). மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்களும் முன் அனுபவம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது. காலப்போக்கில் நிறுவனத்தால் மோட்டார் சைக்கிள் வழங்கப்படும். நாளை ஞாயிற்றுக்கிழமை உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
**கஜன்,**
அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு.
T.P.: 021 222 6678, 0777 550886 (48837)(39-16-15)


## The Theory Examiniation of Diploma in Physical Education the Year 2004/ 2005

The Theory Examination of Diploma in Physical Education for the Year 2004/ 2005 for the 1st & 2nd Year Students is Scheduled to be held from 17.04.2006 till 28.04.2006 and the students who have applied for it are kindly requested to obtain the Admission card on 10.04.2006 at the office of sports Science Unit, University of Jaffna.

**Registrar,**
**University of Jaffna.** (C/48805) (35)




சிவமயம்

## ஸ்ரீ விநாயக ஜோதிடம்

V.நாகராசு சுவாமிகள்
N. முனியம்மா T.P.: 077 9582596

| | | | |
|---|---|---|---|
| குரு | செவ். | சுக். | புதன் |
| சனி | | | சந். |
| சனி | | | சூரி. |
| குரு | செவ். | சுக். | புதன் |



துர்க்காம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. இப்போது இலங்கையில் ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்வார். கணவன் மனைவி சண்டை, வெளிநாட்டுப் பிரயாணம், பிரிவு, காதல் திருமணம் தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல்கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு, பொறாமையில் தொழில் பாதிப்பு, திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றுக்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தமிழ்மொழியில் சொல்லப்படும் (ஆந்திரா மாந்திரீகர்) நீங்கள் பல ஜோதிடரை நம்பி ஏமாந்திருக்கலாம். அதேபோல் எங்களையும் எண்ண வேண்டாம். எங்களிடம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள். மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாங்கள் மேலும் இங்கே தங்க எண்ணியுள்ளோம். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**V.நாகராசு சுவாமிகள்**
"பிள்ளையார் இன்",
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 077 9582596 Room No: 05 (49101)(32-15-16)

# யாழ்.வர்த்தகக் கண்காட்சி 2006

**காலம்: ஏப்ரல் 8 முதல் 11 வரை காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை**
**இடம்: யா/ வேம்படி மகளிர் கல்லூரி**

**அதிர்ஸ்டசாலிகளுக்கு ஆச்சரியப்படவைக்கும் பரிசில்கள்**

**சித்திரைப் புதுவருடத்தை யாழ்.நகரில் கொண்டாடுங்கள்**

- கணனி நிலையங்கள்
- விளம்பர நிலையங்கள்
- CD க்கள்
- புத்தகங்கள்
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள்
- தளபாடங்கள்
- டிஜிட்டல் உலகம்
- தமிழ் SMS
- கணனி விற்பனை

**இன்னும் பலபல காட்சியறைகள்...**

**நிலவு.COM இன் சிறப்பு காட்சியறையில்**

- சுயகற்றலுக்கான CD க்கள்
- கணனிக் கல்வி வழிகாட்டி
- G.C.E. A/L - GIT புத்தகங்கள், CD
- Web Hosting & Domain Names

**பண்டிகைக் காலத்தைக் கொண்டாடுங்கள்**
யாழ்.வர்த்தகக் கண்காட்சி- 2006
By: Dream solutions (Pvt) Ltd.

**ஆச்சரியப்பட வைக்கும் கணனி ஜாதகம்**

பிறந்த திகதி, நேரம் இவை மட்டுமே போதும்

- உங்கள் முழுமையான ஜாதகம் 50 பக்கங்களில்/CDயில்
- 100 வருடங்களுக்கான வருடப் பலன்கள்
- திருமணப் பொருத்தம்

**இவை அனைத்தும் ஒரே நொடியில் சாத்தியம்.**

(49112) (39.32.15.16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் சன்னி தீவிரவாதிகளுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை

பக்தாத்,ஏப்.8

ஈராக்கில் சன்னி முஸ்லிம் பிரிவுத் தீவிரவாதிகளுடன் தொடர்புடைய குழுக்களுடன் அமெரிக்க அதிகாரிகள் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள்.

இத்தகவலை ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தூதுவர் சால்மே காவில்சாத் தெரிவித்துள்ளார்.

புஷ் நிர்வாகத்தில் இருக்கும் மிக உயர் முஸ்லிம் அதிகாரியாவார் காவில்சாத்.

அமெரிக்க அதிகாரிகள் நடத்தியுள்ள பேச்சுகள் ஒருதாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக தாம் கருதுவதாகவும் அமெரிக்கப் படையினர் மீது திவிரவாதிகள் நடத்தும் தாக்குதல்கள் கணிசமாக வீழ்ச்சி கண்டிருப்பதாகவும் காவில்சாத் கூறியிருக்கிறார். என்றாலும் சதாம் ஆதரவாளர்களும் நாகரிக உலகத்தின் மீது தாக்குதல் நடத்துபவர்களோடும் தாங்கள் பேச்சு நடத்தப்போவதில்லையென்று காவில் சாத் தெரிவித்துள்ளார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சதாம் ஹுசேன் நிர்வாகத்தை வீழ்த்துவதில் புஷ் நிர்வாகத்துடன் பணியாற்றிய முக்கியஸ்தர்களில் இவரும் ஒருவர் என்று கருதப்படுகின்றது. குர்திஸ் சமூகத்துக்கும் இதர அரபு சமூகங்களுக்குமிடையில் பிரிவினைகள் விரிவிடையும் போதே ஈராக்கில் இனப் போராட்டம் வெடிக்கும் ஆபத்து ஏற்படக் கூடும் என்றார் காவிசாத்.

பெரும்பாலான அமெரிக்க அதிகாரிகளைப் போலன்று விடயங்கள் எதிர் பார்த்தது போல் நகரவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டவில்லை. (ப)(30)

# 234 தொகுதிகளிலும் போட்டியிடும் ஒரே கட்சி

சென்னை,ஏப்.8

விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்குத் திராவிட கட்சியின் இறுதி வேட்பாளர் பட்டியலை விஜயகாந்த் வியாழக்கிழமை வெளியிட்டார். தேசிய முற்போக்குத் திராவிடக் கழகம் மொத்தம் உள்ள 234 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது. முதற்கட்டமாக மார்ச் 31ஆம் திகதி 140 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இரண்டாவது கட்டமாக ஏப்ரல் 3ஆம் திகதி 77 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. தற்போது 17 வேட்பாளர்களைக் கொண்ட மூன்றாது இறுதிப் பட்டியல் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. (ஐ)(30)

## உலக அரங்கில்

# மரண தண்டனை விதிக்கப்பட்ட தீவிரவாதி மவுசாயி தகுதியுள்ளவர்

## முதற்கட்ட விசாரணையில் ஜூரிகள் தீர்ப்பு

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் இடம்பெற்ற விமானக் கடத்தல், தற்கொலைத் தாக்குதல் தொடர்பான குற்றத்தை ஒப்புக்கொண்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த அல்-கெய்டா தீவிரவாதி சக்காரியாஸ் மஸாயி மரணதண்டனை விதிக்கப்படுவதற்கு தகுதி பெற்றவர் என ஜூரிசபையினர் தீர்ப்பளித்துள்ளனர். மஸியிக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கான இரண்டாம் கட்ட விசாரணை வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட விருக்கிறது. ஜூரிசபையின் தீர்ப்பு நீதிமன்றில் அறிவிக்கப்பட்ட போது, நீங்கள் ஒருபோதும் என் இரத்தத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டீர்கள். கடவுள் உங்கள் எல்லோரையும் சபிப்பார். என்று மவுஸாயி உரத்துக்கத்தினார்.

அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப்பட விருந்தது தொடர்பான ஆறு குற்றச்சாட்டுக்களை அவர் ஒப்புக்கொண்டுள்ளதாக மஸாயிக்கு மரணதண்டனை விதிப்பதற்கு அவர் தகுதியுடைவர் என்பதைத் தீர்மானிக்க செம்ரெம்பர் 11ஆம் திகதிய சம்பவத்தில் ஒரு மரணத்துக்காவது அவர் காரணமாய் இருந்துள்ளார் என்பதில் ஜூரிசபையினர் திருப்தியடைய வேண்டிய நிலையில் இருந்தனர். தாக்குதல் நடைபெறவிருந்ததை அறிந்திருந்தும் புலனாய்வாளர்களிடம் பொய்கூறியிருந்தார் என்பதை அவர் ஒப்புக்கொண்டிருந்தார். இரண்டாம் கட்ட விசாரணை முடிவடைய பல நாள்கள் பிடிக்கும் என்று கருதப்படுகின்றது. இந்த விசாரணையின் போது இறந்தவர்களின் உறவினர்கள் மற்றும் நேரில் பார்த்தவர்களின் சாட்சியங்கள் முன்வைக்கப்படும். இப்போதைய முடிவின்படி மரணதண்டனை சாத்தியம் என ஜூரிசபையினர் கண்டுள்ளனர் என்று நீதிமன்ற அலுவலர்கள் தெரிவித்தனர். (ப)(30)

# எம்.ஜி.ஆர் காலத்துக்குப் பின்னர் இப்போதுதான் பெரும் ஆதரவு அலை

## இப்படிக் கூறுகின்றார் வைகோ



திருச்சி, ஏப்.8

தமிழகத்தில் எம்.ஜி.ஆர். காலத்துக்குப் பின் தற்போதுதான் சட்டப்பேரவைத் தேர்தலில் ஆளுங்கட்சிக்கு ஆதரவு அலை வீசுகிறது என்கிறார் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ.

திருச்சி மாவட்ட முசிறியில் அ.தி.மு.க வேட்பாளர் டி.பி. பூனாட்சிக்கு ஆதரவு கோரி வியாழக்கிழமை பிரசாரம் மேற்கொண்ட அவர் அங்கு உரையாற்றினார்.

அக்கினி வெயிலிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகின்றனர். இந்த ஆட்சி தொடர வேண்டுமென மக்கள் ஆசைப்படுகின்றனர். எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்துக்குப்பின் இந்த அதிசயம் நடைபெறுகின்றது.

1980 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது. ஆனால் 7 மாதங்களுக்குப் பிறகு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க. பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தது. இதே போன்று கடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது. சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. அணி வெற்றி பெறும்.

உழவர் பாதுகாப்புத் திட்டம், இலவச சைக்கிள் திட்டம் ஆகியவை மக்களை ஈர்த்துள்ளன. சுனாமி நிவாரணம், வெள்ள நிவாரணப் பணிகள் தமிழகத்தில் நடைபெற்றது போன்று வேறு எங்கும் நடைபெறவில்லை.

கருணாநிதி நிறைவேற்ற முடியாத திட்டங்களைக் கூறி வருகிறார். இலவச ரீ.வி. தருவேன் என்கிறார். இலவசமாக கேபிள் இணைப்பு வழங்குவாரா? கேபிள் டி.வி. விநியோகத்தை அரசுடைமையாக்கும் சட்டத்தை ஏன் தடுத்தார் - என்றார் வைகோ. (ஐ) (27)

# விமானத்தில் பதிவான ஒலி நாடா நீதிமன்றில் ஒலிக்கச் செய்யப்படும்

நியூயோர்க்,ஏப்.8

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி தாக்குதலுக்காகக் கடத்திச் செல்லப்பட்டு பென்சில்வேனியாவில் வீழ்ந்து நொறுங்கிய விமானத்தின் விமான ஓட்டியின் அறையில் பதிவு செய்யப்பட்டிருந்த ஒலி நாடா நீதிமன்றில் பகிரங்கமாகப் பலரும் கேட்கும்படி முதல் தடவையாக ஒலிக்கச் செய்யப்படவிருக்கின்றது. இதுவரை அந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மட்டுமே அதனைக் கேட்டுள்ளனர். குற்றத்தை ஒப்புக்கொண்டு மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள அல்-கெய்டா தீவிரவாதி சக்காரியாஸ் மவுசாயின் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றில் ஒலி நாடாவை ஒலிக்கச் செய்வதற்கு நீதிபதி அனுமதியளித்தார்.

37 வயதான மவுசாயிக்கு மரணதண்டனை விதிப்பதா என்பது பற்றித் தீர்மானிப்பதற்காக ஜூரிசபையின் முன்னிலையில் விசாரணை நடைபெற்றுவருகின்றது.

மவுசாயி மரணதண்டனை விதிக்கப்படுவதற்கு தகுதியானவர் என எற்கனவே ஜூரிகள் தீர்மானித்துவிட்டனர்.

மரணதண்டனையை நிறைவேற்றுவதா என்பது பற்றித் தீர்மானிப்பது குறித்த விசாரணையே இப்பொழுது நீடிக்கின்றது. (ப)(30)

# வாள் மீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம்; அ.தி.மு.க. - ம.தி.மு.க. கூட்டணிக்கு இப்படி விளக்கம்!

திருவொற்றியூர், ஏப்.8

வாளமீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம் போல அ.தி.மு.க. - ம.தி.மு.க. கல்யாணம் செய்துள்ளது என்றார் கனல்காசிநாதன்.

திருவொற்றியூர் அ.தி.மு.க. வேட்பாளர் மூர்த்தியை ஆதரித்து மீன் சந்தை அருகில் எஸ்.சி.சேகர் தலைமையில் ம.தி.மு.க. பிரசாரக் கூட்டம் நடந்தது. இதில் ம.தி.மு.க. பேச்சாளர் கனல்காசிநாதன் பேசியதாவது:-

ம.தி.மு.க. தொடங்கியபோது வாழாது, வளராது என்று கலைஞர் சொன்னார். 13 ஆண்டுகளுக்குப் பின்பு ஜெயலலிதாவுடன் நாங்கள் கூட்டணி சேர்ந்துள்ளோம். தி.மு.க. வுடன் தொகுதிப்பங்கீட்டுப் பேச்சு நடந்த போதே போயஸ் தோட்டத்தில் கொக்கி அடித்துவிட்டுத்தான் போனோம். சபரிமலை போவது போல இருமுடி கட்டிக்கொண்டு கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை என்று மாநாடு வரைக்கும் போனோம்.

ஆனால், வழியில் இந்த மாரியாத்தா வந்தா. எங்களைக் கூட்டணிக்கு கூப்பிட்டா. போய்ச் சேர்ந்துவிட்டோம். இப்ப இந்தக் கூட்டணி நச்சுன்னு இருக்கிற கூட்டணியா ஆயிட்டுது. ஜெயலலிதா கையில் தேசியக் கொடியை கொடுத்தா பாரதமாதா மாதிரித் தெரிவாங்க. திருமாவளவனிடம் வில்லைக்கொடுத்தா அர்ச்சுனன் போல இருப்பார். வைகோவிடம் ஏகே 47ஐ கொடுத்தா பிரபாகரன் போல இருப்பார். மக்கள் இப்போது புதுமையைத்தான் விரும்புகிறார்கள்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஏரிக்கரை மேலே போறபெண் மயிலே என்று பாடினார். ஆனால், இப்ப வாள மீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம் என்ற பாட்டைத்தான் பாடுறாங்க. அதே போலத்தான் அ.தி.மு.கவுக்கும் ம.தி.மு.கவுக்கும் கல்யாணம். மக்கள் இந்த கூட்டணியைத் தான் விரும்புகிறார்கள்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ) (27)

# 18 வயதுக்குட்பட்டோரை சதாம் கொலைசெய்ய உத்தரவிட்டாராம்

## சாட்சியங்கள் பொய்யென நீதிமன்றில் அவர் வாதம்



பக்தாத்,ஏப்.8

18 வயதுக்குட்பட்டவர்களையும் கூட கொலை செய்வதற்கான கட்டளைகளை அங்கீகரித்திருந்தார் என்ற சாட்சியங்களை முன்னாள் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் நீதிமன்றத்தில் நிராகரித்தார்.

சதாம் ஹுசைன் மீதான விசாரணை மூன்று வாரங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பமாயிற்று. தமது ஆட்சியின் போது குறைந்தது 18 வயதுக்குட்பட்டவர்களையும்கூட கொன்றொழித்துவிட அவர் அனுமதி அளித்திருந்தார் என்ற சாட்சியங்களை சதாம் நிராகரித்தார்.

1982 ஆம் ஆண்டு அவரைக்கொலை செய்ய எடுக்கப்பட்ட எத்தனிப்பு ஒன்றினையடுத்து துயேல் நகரில் ஷியா இனத்து மக்களைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் மீது நடைபெறும் விசாரணையில் முதல் தடவையாக அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். பக்தாத்தில் நடை [illegible] தரப்பு சாட்சிகள் இலஞ்சம் கொடுக்கப்பட்டிருந்தார்கள்; என்ன சொல்லவேண்டும் என்பது பற்றி பயிற்சி கொடுக்கப்பட்டிருந்தார்கள் என்று சதாம் தெரிவித்தார்.

நீதிபதியுடன் ஏற்பட்டதொரு வாக்குவாதத்தையடுத்து எதிர்த் தரப்பு சட்டத்தரணி ஒருவர் வெளியேற்றப்பட்டார். அமெரிக்கரால் நடத்தப்படும் சிறைச்சாலைகளில் ஈராக்கியர் சித்திரவதை செய்யப்படுவது தொடர்பான சில புகைப்படங்களை நீதிமன்றில் பகிரங்கப்படுத்த முனைந்தபோது அந்த பெண் சட்டத்தரணி வெளியேற்றப்பட்டார்.

அபுகிராய்ப் சிறையில் அமெரிக்கர்கள் இதைத்தான் செய்தார்கள் என்று அவர் கூறினார். வெளியேற்றப்பட்ட சட்டத்தரணி பின்னர் நீதிமன்றில் ஆஜராக அனுமதிக்கப்பட்டார்.

சதாம் ஹுசைன் தனக்குத்தாமே வாதாடினார். 1982 ஆம் ஆண்டு 148 பேரை கொலை செய்த வழக்கில் அவரும் வேறு 7 பேரும் விசாரிக்கப்படுகிறார்கள். புதன்கிழமை விசாரணையின்போது சதாமின் அனுமதியுடன் கொல்லப்பட்டவர்களில் 28 பேர் 18 வயதுக்குட்பட்டவராய் இருந்துள்ளனர் என்று அரசுத் தரப்பில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

விசாரணையின் ஆரம்பத்திலேயே நீதிபதிக்கும் சதாம் ஹுசைனுக்குமிடையில் வாக் [illegible] அரசியல் கருத்துக்களை [illegible] வேண்டாம் என்று நீதிபதி கூறிய போது "உள்துறை அமைச்சருக்கு நீங்கள் பயந்துபோயுள்ளீர்கள், என்நாயைக் கூட அவரால் அச்சுறுத்த முடியாது" என்றார் சதாம். தற்போதைய அரசின் கீழ் உள்துறை அமைச்சர், மனித உரிமை மீறல் மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பாகவும் சதாம் புதிய குற்றச் சாட்டுகள் மீது விசாரிக்கப்படவிருக்கின்றார். வட ஈராக்கில் குர்திஷ் இனத்தவர்களுக்கு எதிராக 1980 களில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை இந்தப் புதிய விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அச்சமயம் 180 ஆயிரம் மக்கள் வரை படைகளால் கொன்றொழிக்கப்பட்டிருந்தனர் என்று கருதப்படுகின்றது.

துஜெயில் நகர மக்கள் கொலை தொடர்பான கட்டளைகளை அங்கீகரித்து இடப்பட்டுள்ள கையெழுத்துக்களை சர்வதேச அமைப்பு ஒன்று பரிசீலித்து தீர்மானிக்க வேண்டும் என்று சதாம் கோரிக்கை விடுத்தார். ஏனைய 7 பிரதிவாதிகளும் தமது கையெழுத்துக்கள் போலியானவை என்று கூறியிருந்தனர். (ப)(25)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்



அருட்சகோதரி

**மத்தியூஸ் அருளம்மா**

பகுதித்தலைவர்

*(08.04.2006)*

எமது பாடசாலையில் 15.02.1993 தொடக்கம் ஆங்கில ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் பெரும்பணியாற்றி 01.04.2006இல் ஓய்வுபெற்று இன்று தனது 51 ஆவது அகவையில் காலடி வைக்கும் இந்நன்நாளில் அவரைத் தன் அர்ப்பண வாழ்வின் பணியை மேலும் சிறப்புடன் ஆற்ற, அடைக்கல அன்னையூடாக இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/சென் மேரீஸ் றோ.க.த.க.பாடசாலை (O.L.R_)

(49007) யாழ்ப்பாணம். (21.16.17)



## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
## நாகேஸ்வரம் - அளவெட்டி

நாளை 09.04.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி 9.00 மணிக்கு நி.பாஸ்கரன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) மாணவனின் சொற்பொழிவும் முற்பகல் 10.00 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும், தொடர்ந்து தீர்த்தமும் இடம்பெறும் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

* ஞாயிற்றுக்கிழமைதோறும் 12.00 மணிக்கு நடைபெறும் பூசையும், அன்னதான வைபவமும் வழமைபோல் இடம்பெறும்.

நாகேஸ்வரம் - அளவெட்டி. பொ.ப.சபை

## சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 - 06 - *1946*



மறைவு 12 - 03 - *2006*

**திருமதி கந்தையா பாக்கியம்**

*(நீர்வேலி)*

எம்மை தோளிலும் மார்பிலும் தூக்கி
பாசத்தைக் காட்டி
அன்புடன் அரவணைத்த அன்னையே!
நீங்கள் எம்மை விட்டு நீங்கி ஐயாறு நாளாகியும்
எம் நெஞ்சத்தில் சிம்மாசனமிட்ட
உங்கள் நினைவுகள் நீங்கா.

(சி-48739)(21.11.17)

எங்கள் இல்லத்தலைவியின் பிரிவுச்செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்து இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன், இன்று (*08.04.2006*) சனிக்கிழமை முற்பகல் *10* மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்:

(48839) (21.17.16) **கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## திறந்த பல்கலையில் டிப்ளோமா விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப்.8

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியைத் தொடர்வதற்கான அடுத்த தொகுதி விண்ணப்பதாரிகளுக்கான படிவங்கள் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமையன்று விநியோகிக்கப்படும் என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் தமக்குரிய படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும்- யாழ்.பிராந்திய நிலைய இயக்குநர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார். (எ)(21)

## திருக்கேதீஸ்வரத்தில் பங்குனி உத்தரப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.8

சரித்திரப் பிரசித்திபெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பெருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் ஆயிரத்தெட்டு சங்குகளால் திருமுழுக்காட்டும் வைபவம் சிறப்பு நிகழ்வாக இடம்பெறும்.

பங்குனி உத்தரப் பெருவிழாவில் கலந்துகொள்ள வருகைதரும் பக்தர்களின் நலன் கருதி போக்குவரத்து மற்றும் அன்னதான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-14)(21)

## சமய சந்நிதிகளில்...

யாழ்ப்பாணம்,ஏப்.8

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய பங்குனி உத்தர இலட்சார்ச்சனை கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள இந்த இலட்சார்ச்சனை நாளை மறுதினம் காலை 8 மணிக்கு 64 உபசார விசேட பூசை வழிபாட்டுடன் நிறைவடையும்.

மறுநாள் 11ஆம் திகதி காலை 7 மணிக்கு பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர 1008 சங்காபிசேகமும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு பௌர்ணமி திருவிளக்குப் பூசையும் இடம்பெறவுள்ளது. (ஒ-203)(32)

* * *

வலி.தென்மேற்கு,ஏப்.8

கீரிமலை நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்தில் அம்பாளுக்கான வருடாந்த பெருந்திருவிழா கால விசேட பூசை வழிபாடுகள் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் என்று ஆலய ஆதீன கர்த்தாவும் பிரதம குருக்களுமான சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் தெரிவித்தார்.

தெல்லிப்பழை இராணுவ சோதனைச் சாவடி ஊடாகவும் சேந்தாங்குளம் இராணுவ சோதனைச் சாவடி ஊடாகவும் பக்தர்கள் ஆலயத்திற்குச் சென்றுவரமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-135)(32)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.8

கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா கடந்த 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை சப்பரத்திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் தொடர்ந்து தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஒ-203)(32)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.8

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை சப்பரத்திருவிழாவும் நாளை தேர்த்திருவிழாவும் நாளைமறுதினம் 10ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ஒ-203) (32)

* * *

கரவெட்டி,ஏப்.8

பருத்தித்துறை வியாபாரிமூலை பழவத்தை ஸ்ரீகாளியம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும் நாளைமறுதினம் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 11ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஒ-70-203)(32)

## 19ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 17 - 09 - 1969



உதிர்வு 08 - 04 - 1987

**சற்குணநாதன் நந்தகோபன்**

ஆண்டுகள் பத்தொன்பது போனாலும்
உன் புன்சிரிப்பு வதனம் கண்முன் தோன்றுதடா!
நந்தன் என்ற நாமம் இன்றும் வழங்குதடா.

உன்பிரிவால் வாடும்:

சற்குணநாதன் (அப்பா - Retd.T.A., லயன்ஸ்)
இரத்தினபூபதி (அம்மா - லயன்ஸ்)
விஜயறஞ்சினி இரத்தினகுமார் (அக்கா குடும்பம் - லண்டன்)
நவறஞ்சினி சோதீஸ்வரன் (அக்கா குடும்பம் - ஹொலண்ட்)
நந்தினி ஸ்ரீகாந்தன் (அக்கா குடும்பம் - கனடா)
வேணுகோபன் மைதிலி (தம்பி குடும்பம் - லண்டன்)
ஸ்ரீறஞ்சினி - ஜேயசன் (தங்கை குடும்பம் -லண்டன்)

(49099)(21.17.16) *மீசாலை மேற்கு, மீசாலை.*

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**வா.இராசரெத்தினம்**

**(வாமதேவா - இராசரெத்தினம்)**

திதி: வளர்பிறை தசமி (08-04-2006)

தோற்றம் 19-01-1946 மறைவு 20-03-2005

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் அப்பா
உம் நினைவு எம்மை விட்டு அகலவில்லை
பாசத்துடன் எம்மை வளர்த்ததை
நாம் என்றும் மறவோம்! உம் நினைவால்
வாழும்.....

**மனைவி, மகள்மார், மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

மாரியம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-48717) (21.17.16) தகவல்: ஜீவன் (மகன்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**S. கதிரவேலு யேசுதாசன்**

அன்னை மடியில் 01-08-1937 ✝ ஆண்டவன் மடியில் 08-04-2005

*"அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்"*

இன்று (08.04.2006) சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி ஆராதனையில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள்.**

நவாலி கிழக்கு, மானிப்பாய். (49021)(21.17.16)

## மரண அறிவித்தல்

**சிறிகாந்தன் நரேன்**

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறிகாந்தன் நரேன் அவர்கள் 06.04.2006 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிறிகாந்தன் (ராசன் - கட்டட ஒப்பந்தகாரர்) - விமலேஸ்வரி (தாதி - யாழ். போதனா வைத்தியசாலை) தம்பதியரின் அன்பு மகனும் மகாலிங்கம், தனலட்சுமி, இராசையா, இராசு ஆகியோரின் அன்புப் பேரனும் பத்மலீலா, சந்திரா (ஜேர்மனி), இந்திரா, விமலா (கொக்குவில்), மாலினி (டென்மார்க்), பாலகிருஷ்ணன் ஆகியோரின் மருமகனும் பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, கமலேஸ்வரி, சிவேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.04.2006) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (49098)(21.16.17) தகவல் ம.சிறிகாந்தன் (தந்தை).




Sole Agents in Sri lanka

புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி 30% வரை

Sarees & Salwars

OCEANICK IMPEX

April 1 முதல் 14 வரை



192, Main Street, Colombo 11. Tel: 2336720, Whole Sale : 2384131. Fax:2326961

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



சர்வதேச 'கெயர்' நிறுவனத்தினால் ஆதிகோவிலடியில் நிறுவப்பட்ட வீடுகளை உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஸ் நாடாவெட்டி வீடு ஒன்றைத் திறந்துவைப்பதையும் நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்றையும் படங்களில் காணலாம். (எ)(24)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.8

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (எ-202) (24)

## தாய் தந்தையரை இழந்த சிறுவர்களைப் பராமரிக்க வசதி

கோப்பாய்,ஏப்.8

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வதியும் தாய், தந்தையரை இழந்த சிறுவர்கள் 5 பேரை அகில இலங்கை வர்த்தக சங்கம் பொறுப்பேற்று சகல வசதிகளையும் வழங்கி திருக்கேதீஸ்வரம் சிவன் அருள் நிலையத்தினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் சிறுவர் நிலையத்தில் வைத்துப் பராமரிக்கவுள்ளது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருப்பின் அவர்களை உடனடியாகப் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-72) (24)

## வரணியில் மயானங்கள் புனரமைப்பு

தென்மராட்சி,ஏப்.8

உலக உணவுத் திட்டத்தின்கீழ் வரணிப் பிரதேசத்தில் இந்த வருடம் இரண்டு மயானங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

வரணி வடக்கு முள்ளிப் பொதுமயானம் மற்றும் மாசேரி கப்பத்தைப் பொதுமயானம் என்பனவே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

மேற்படி மயானங்கள் தொடர்பான தரவுகள் தயாரிக்கப்பட்டு உரிய அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று சாவகச்சேரிப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, வரணி வடக்கு முள்ளி மயானம், தென்மராட்சியில் நிலவிய யுத்த நெருக்கடிகளின்போது படையினரின் சுடுகலன் பயிற்சி மையமாகப் பயன்படுத்தப்பட்டமையும் - தற்போது காடு மண்டி முட்பற்றையாகக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (எ-122) (24)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# பண்டத்தரிப்பு வைத்தியசாலையில் குழாய்க்கிணறு நிறுவக் கோரிக்கை

வலி.தென்.மேற்கு,ஏப்.8

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் குழாய்க்கிணறு ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கம், யாழ். சுகாதார சேவைப் பிரதிமாகாணப் பணிப்பாளரிடம் கடித மூலம் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளது.

வைத்தியசாலையிலுள்ள கிணற்றிலிருந்து சுத்தமான குடிதண்ணீரைப் பெறமுடியவில்லை என்றும் -

இந்தக் கிணற்றைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் - அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி வைத்தியசாலையின் நான்கு எல்லைகளிலும் வேலிகள் எதுவும் இல்லாதிருப்பதால் சுற்றுமதில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் -

சங்கத்தின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகச் சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம் தெரிவித்தார். (எ-135) (24)

# கிராம அபிவிருத்தித் திணைக்கள ஏற்பாட்டில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.8

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் யாழ். மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் மாதர் அபிவிருத்தி நிலையங்களின் தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் நடைபெறவுள்ளன.

இருதினங்களிலும் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இக்கண்காட்சி இடம்பெறும்.

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா. தியாகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில் முதலாம் நாள் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி, திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. குமாரசிங்கம், யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வே.பேரின்பநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் செல்வி தெ.து. விஜயலட்சுமியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், திணைக்களக் கணக்காளர் க.ஆ. இரகுநாதன், யாழ். மாவட்ட செயலக தலைமைப் பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திரபிள்ளை, முன்னாள் யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. செல்வரத்தினம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இரண்டாம் நாளன்று திங்கட்கிழமை மாலை 6மணிக்குப் பரிசளிப்பு வைபவம் இடம்பெறும். (எ- 202) (27)

## வரணி – குடத்தனை வீதியை புனரமைக்க ஏற்பாடு

தென்மராட்சி,ஏப்.8

வரணி - குடத்தனை வீதியின் ஒரு பகுதியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதிருந்த இந்த வீதியைப் புனரமைக்குமாறு பொது அமைப்புகள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்திருந்தன. இதனையடுத்து வீதியின் ஒரு பகுதியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-122) (24)

## சிவதொண்டன் நிலையத்தில் இன்று யோகர் சுவாமி குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.8

யோகர் சுவாமிகளது நாற்பத்திரண்டாவது குருபூசைத் தினத்தை முன்னிட்டு இன்று காலை 8 மணிமுதல் யாழ். சிவதொண்டன் நிலையத்தில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முற்பகல் 9.45 மணிக்கு சுவாமிகளின் திருவுருவுக்கு திவ்வியமான அபிஷேகம், முற்பகல் 11.45 மணிக்கு மகேஸ்வர பூசை என்பன இடம்பெறும்.

இதேவேளை - எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டு. - செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் ஆச்சிரம வாழ்வு இடம்பெறும். (எ-7)(24)

## 'கியூமெடிக்கா' நிறுவிய சர்வதேச பாடசாலை திறப்பு

நவாலி,ஏப்.8

'கியூமெடிக்கா' நிறுவனத்தினால் மானிப்பாயில் நிறுவப்பட்ட சர்வதேச பாடசாலை அண்மையில் யாழ். அரச அதிபர் கே.கணேஸினால் திறந்துவைக்கப்பட்டது.

இந்தப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி முதல் 9ஆம்ஆண்டு வரை கல்வி கற்பிக்கப்படுகிறது என்றும் -

இங்கு கற்கும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உடுபுடைவைகள், கற்றல் உபகரணங்கள் மற்றும் போக்குவரத்துச் சேவை என்பன இலவசமாக வழங்கப்பட்டு வருவதாகவும் 'கியூமெடிக்கா' நிறுவனப் பணிப்பாளர் சாம்.இராசசூரியர் தெரிவித்தார். (எ-100) (24)

# அருள்ஒளி பரப்பியவர்களில் முத்தவர் தவத்திரு சிவயோக சுவாமிகள்

*தவத்திரு சிவயோக சுவாமிகளின் குருபூசைத் தினம் இன்று சனிக்கிழமை ஆகும். அதனை முன்னிட்டு இந்த கட்டுரை பிரசுரமாகிறது.*


ஈழத்தில் அருள் ஒளி பரப்பியவர்களில் யோகர் சுவாமிகள் முதன்மையானவர். 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி மக்கள் அஞ்ஞான இருள் நோயால் பிடிக்கப்பட்டுத் தத்தளித்த காலம். சைவசமய உண்மைகளை அறியவோ, படிக்கவோ முடியாத காலம் அது.

மலநோய், உடல்நோய், மனநோய் நீங்க எம்பெருமானை நினைந்து திருவைந்தெழுத்தோதி வீபூதியணிய முடியாத காலம்.

எம்பெருமானின் புகழைப்பாடவும், அறியவும் முடியாது இருந்த அந்தக் காலத்தில் 1872ஆம் ஆண்டில் சின்னாச்சி அம்மைக்கும் அம்பலவாணருக்கும் இருளைக் கிழித்து உதிக்கின்ற ஞானசூரியன் போன்று அவதாரம் செய்தார் சிவயோக சுவாமிகள்.

மிகவும் சிறியவயதில் தாயை இழந்த இவர், கொழும்புத்துறையிலுள்ள உறவினருடன் இருந்து கல்வி கற்றார். அந்நியர் வருகைக்கு முன்னர் கொழும்புத்துறை வாழையடி வாழையாக சைவ மரபு, பண்பாடு, கலாசாரம் என்பவற்றைத் தழுவி இருந்த பிரதேசம்.

இவருடைய தாய் மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர். சிறுவயதில் நடந்தே நல்லூர்க் கந்தனிடம் வருவார். அக்காலத்தில் செல்லப்பா சுவாமிகள் தேரடியில் இருந்து போவோர், வருவோரைப் பார்த்து ஏதோ



பிதற்றிக்கொண்டிருப்பார்.

செல்லப்பா சுவாமிகள் பிதற்றும் ஒவ்வோர் சொல்லும் அமிர்தமழைப் பெருந்துளி போலக் காணப்பட்டது. மாய வலையில் அகப்படும் மானிடருக்கு அது வேண்டாத கூற்றுப் போன்று காணப்பட்டது. யோகரின் பூர்வபுண்ணியம் ஈழத்தவரின் மாபெரும் தவம். அதனால், யோகர் மெல்ல மெல்ல செல்லப்பா சுவாமிகளின் அருகே சென்றதும் [illegible] யோகரின் [illegible] அமிர்தாரகை [illegible]ால அந்த வசனம் ஈர்க்கப்பட்டது.

சித்தாந்தங்களில் வருகின்ற ஞானப்பொதியை உணர்ந்த யோகர்சுவாமி அன்றே செல்லப்பா சுவாமிகளால் பூரணமாக ஈர்க்கப்பட்டார். ஊனப்பிறவி நோயை நீக்க வந்த சீலரான செல்லப்பதேசிகரைத் தரிசித்து, அவர்களின் திருவடிகளைச் சிக்கெனப் பிடித்த எங்கள் குருமணி யோகமுனியின் அற்புதங்கள் எழுத்தில் - பேச்சில் அடங்கா. இச்சிறுகட்டுரையில் விரிவாக எழுதிவிடமுடியாது. 'மணற்கேணி' போன்று சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு ஊறிக் கொண்டே செல்லும்.

யோகர் சுவாமிகள் தமது வாசஸ் தலமாகக் கொழும்புத்துறையில் ஒரு சிறிய கொட்டிலை அமைத்தார். அதிலிருந்து தவம் செய்யத் தொடங்கினாலும் திருமுறைகள், சித்தாந்தங்கள், புராணங்கள், தாயுமானவர், பட்டினத்தார் போன்றோரின் அருட்பாடல்களைப் படித்து மனனம் செய்தார்.

ஒரு சம்பவம் மட்டும் பார்ப்போம்.தனது

## மாதாஜி

குருமணியாகிய செல்லப்பா சுவாமிகளை யோக முனியாகிய சிஷ்ய சுவாமி அகலாது - அணுகாது - இருந்தகாலம். செல்லப்பா [சு]வாமிகள் '' தேகம் நீயல்ல'' என்பதைச் சீடனுக்கு உணர்த்த உபாயம் ஒன்று கண்டார்.

ஒருநாள் குருவிற்கும் சீடர்களுக்கும் நல்லபசி. சாவகச்சேரியில் கத்தரிக்காய் வாங்கி [illegible] கறியமுதும் சோறும் ஆக்கினார்கள். நியமங்களை முடித்து எல்லோரும் சாப்பிட ஆயத்தமாகும்போது, யாருக்குச் சாப்பாடு என்று உணவுடன் பானை,சட்டிகளைச் செல்லப்பா சுவாமிகள் உடைத்துத் 'தேகம் நீ யல்ல ஆத்மா நீ' என்ற பேருண்மையை விளக்கினார்.

யோகர்சுவாமிகள் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்தாங்கு நற்சிந்தனை என்ற தெவிட்டாத்தேனமுத நூலை ஈழம்வாழ் மக்களுக்கன்றி அகில உலகத் தமிழ் மக்கள் முதலாக ஆங்கிலேயரும் படித்து உய்ய அருளினார்.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற கடல் கடந்த நாட்டவரான சீடர்கள் சுவாமிகளின் திருவடியை இறுகப் பிடித்தும் பெரும் பேறடைந்த சுவடுகள் அளவெட்டி, மட்டக்களப்பில் உண்டு. அமெரிக்கச் சுப்பிரமணிய முனியென்னும் சுவாமிகள், அமெரிக்காவில் கலிபோர்னியாவில் யோகர் சுவாமிகளின் பெயரால் சித்தாந்தமடம் என்னும் மிகப் பிரமாண்டமானமடம் அமைத்துச் சூழவர உருத்திராக்க மரங்களும் சோலையாக உண்டாக்கியுள்ளார். தம்மை நாடிவந்த ஆங்கிலேய சீடர்களுக்கு சைவசமயத் தெய்வங்களின் நாமங்களைச் சூட்டி மாபெரும் சைவசமயமாகக் கலிபோர்னியா நகரத்தை ஆக்கிவிட்டார்.

இவ்வாறு எல்லா நாட்டவரும் யோகர் சுவாமிகளின் திருவடி நிழலை இறுகப்பற்றிப் பேரின்பம் பெற்று வருகின்றனர். சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல் முழுதும் செம்பொருள் நிறைந்த தெய்வீக மணிமாலை, சமயகுரவர் நால்வர், திருமூலர், தாயுமானவர் ஆகியோரின் அருட்பாடல்களின் அரும் பெரும் கருத்துகள் அதில் பொதிந்திருப்பதைக் காணமுடிகின்றது. எனவே, [யோ]கர் சுவாமிகளின் திருவடிகளைப் போற்றி நற்சிந்தனைபாடி உய்வோமாக. (27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கை ஸ்ரீ பரமானந்த சிறார்-முதி
# முப்பத்தேழாவது
# ஸ்ரீ பரமானந்த சுவாமிகளின் பு


சமாதி அடைந்த சுவாமி சிறார்களுடன்...


சிறார்கள்,முதியோர்கள் பிரார்த்தனையில்...


இந்து கலாசார அமைச்சினால் 2003ஆம் ஆண்டு அன்பளிப்புச் செய்யப்பட்ட பேருந்து...

## மாவட்ட நீதிபதியின் செய்தி



யாழ்ப்பாணம் வடமராட்சியிலே பல வருடங்களாக அரிய சேவையினைப் புரிந்துவந்த ஸ்ரீபரமானந்த சுவாமி சிறார், முதியோர் இல்ல ஆச்சிரமம் தனது 37 ஆவது அகவையில் கால்தடம் பதிப்பதையிட்டு பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இந்த அரிய பணி புரியும் ஆச்சிரமம் தனது சேவைகளை மிகுந்த பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் சமூகத்திற்கு வழங்குவது யாவரும் அறிந்ததே. அந்தவகையில் ஏராளமான சிறார்களையும், பல முதியோர்களையும் பராமரித்து அவர்களின் வாழ்க்கைக்கு ஒரு வழிநிலை கோலி, பலரது வாழ்க்கையில் தீபங்களை ஏற்றியுள்ளது.

மேலும் இந்த ஆச்சிரமத்தின் ஸ்தாபகரான சுவாமி ஸ்ரீ பரமானந்த அவர்களின் 11ஆவது குருபூசைதினம் இந்த 37ஆம் அகவையில் அனுஷ்டிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியதே. இந்த ஆச்சிரமம் சுவாமி அவர்களின் ஆசியுடன் இன்னும் பல்லாண்டுகள் மேலும் சிறப்புடன் பணியாற்ற எனது ஆசிகளை வழங்கி நிற்கின்றேன்.

கந்தையா அரியநாயகம்,
*மாவட்ட நீதிபதி,*
*பருத்தித்துறை*

## ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை

தவத்திரு பரமானந்த சுவாமிகளின் குருபூசை 8.4.2006 சுவாமிகள் ஸ்தாபித்த சிறுவர் இல்லத்தில் நடக்க உள்ளது. சுவாமிகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது. சுவாமிகள் கணேஸ்பூரி மகராஜ் அவர்களிடம் சந்நியாக தீட்சை பெற்று தமது வாழ்நாள்களை சிவப்பணியில் செலவழித்தார். இவரது முன் உதாரணத்தைப் பார்த்து சிவத் தொண்டில் சிலர் ஈடுபடுவார்களாயின் சமுதாயத்துக்கு பெரு நன்மை உண்டு.

'அன்பே சிவம்'

தூயஅன்னையின்
அடியவன் சுவாமி சித்ருபானந்தா

## கரவெட்டி பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி




வதிரி ஸ்ரீ பரமானந்த சிறுவர், முதியோர் இல்லம் தனது 37ஆவது ஆண்டு நிறைவு விழாவினையும் சுவாமி பரமானந்த அவர்களின் 11ஆவது நினைவு தினத்தினையும் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஆதரவற்ற சிறுவர்களை பாதுகாத்தும் அரவணைப்பற்ற முதியோர்களுக்கு அடைக்கலம் கொடுத்தும் அளப்பரிய சேவையாற்றிவரும் இந்த நிறுவனம் தூயசிந்தனையுடனும் அர்ப்பணிப்பு மிக்க சேவையினாலும் அனைவரின் மனங்களிலும் இடம்பிடித்துள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினாலும், இயற்கையினாலும் பெற்றோர்களை இழந்த பிள்ளைகளினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி பராமரித்து கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அடிப்படைகளை இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது. மக்களின் புலம்பெயர்வினால் ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்களுக்கும் பொருளாதார வசதியற்ற நிலையில் உள்ள முதியோர்களுக்கும் ஆதரவு வழங்கி அடைக்கலம் கொடுத்துப் பராமரிப்பதன் ஊடாக சமூகத்தில் இருக்கக்கூடிய மிகவும் பாரிய பொறுப்பு ஒன்றினை நிறைவேற்றி வருவது நன்றியுடன் நினைவு கூரத்தக்கதாகும். இந்த நிறுவனத்தின் தற்போதைய நிர்வாகத்தினர் சமூக நோக்குடனும் தூரப்பார்வையுடனும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதும் பாராட்டப்படவேண்டியதாகும். அடைக்கலம் தேடி வருவோரை அரவணைத்து பாதுகாப்பதும் அவர்களின் நலன்களை பேணுவதும் அறம் சார்ந்த செயற்பாடாக முன்னிலைப்படுத்துவதுடன் இவ்வரிய பணியில் ஈடுபடும் அனைவரின் வாழ்வும் சிறக்க வேண்டுவதுடன் இந்நிறுவனம் தனது பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எல்லாம் வல்ல விநாயகனின் அருளை வேண்டி நிற்கின்றேன்.

சி.சத்தியசீலன்
*பிரதேச செயலர், கரவெட்டி.*

ஸ்ரீ பரமானந்த சுவாமிகளின் சமாதியும் தியான மண்டபமும்...



## ஸ்ரீ பரமானந்த சுவாமிகளின் அடிச்சுவட்டில்...

ஸ்ரீபரமானந்த சுவாமி அவர்கள் வட இலங்கை ஸ்ரீபரமாந்த சிறார், முதியோர் இல்ல ஆச்சிரமத்தை ஆதரவற்ற, வசதிகள் குறைந்த ஆண், பெண் சிறார்களுக்கு வாழ்வகமாகவும் அவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் அனாதரவான முதியோர்களுக்கு ஆதரவளிக்கும் நிலையமாகவும் ஆன்மீக வாழ்வுக்கான ஆச்சிரமாகவும் 1969ஆம் ஆண்டு நிறுவினார்கள். கடந்த 37 வருட காலமாக இந்நிறுவனம் பல இன்னல்களுக்கு மத்தியிலும் சுவாமி அவர்களது எண்ணத்தைச் செயற்படுத்திக் கொண்டு வந்திருக்கின்றது. சமூக சேவைகள் திணைக்களத்தில் பதியப்பட்ட இல்லமாக இருக்கின்றது. 1970 ஆம் ஆண்டு சுவாமி அவர்கள் இந்நிறுவனத்தை அரசால் அங்கீகரிக்கப்பட்ட தரும நிலையமாக அரச வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். தர்மகர்த்தா சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிறுவனத்திற்கு அரச உதவியாக ஒரு பிள்ளைக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 10/- தரப்படுகின்றது. ஆனால், அவர்களின் கல்வி, உணவு, உடை போன்றவற்றிக்கு சராசரி 100/- செலவு செய்யப்படுகின்றது. முதியோரும் சிறார்களும் இவ்வில்லத்தில் வீட்டில் வளர்வது போன்ற சூழலில் பராமரிக்கப்படுகின்றார்கள். வழிபடுவதற்கு ஆலயம், தியானமண்டபம் அமையப்பெற்றிருக்கின்றது. அருகில் அமைந்திருக்கும். யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திற்குக் கல்வி பயிலச் செல்கின்றனர். பாடசாலைக்கு அவர்கள் சீருடையுடன் ஒழுங்காகச் செல்வது பார்ப்போர் பலராலும் பாராட்டிப் பேசப்படுகிறது. தற்போது 58 சிறார்களும் 16 முதியோர்களும் தங்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கான நூலக வசதி செய்யப்பட்டுள்ளது. மருத்துவ வசதிகளும் உள்ளன. ஒவ்வொரு ஞாயிறும் அனைவரும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அனைத்து செய்தித்தாள்களும் தினசரி, வார மஞ்சரிகளும் வழங்கப்படுகின்றன. உடலாலும் உள்ளத்தாலும் ஆரோக்கியமாக இக்கின்றனர். பாடசாலை மட்ட, கோட்டமட்ட, வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து பரிசில்களைப் பெற்றுள்ளார்கள். அதேபோன்று கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகப் போட்டிகளிலும் பங்குபற்றி பல பரிசில்கள் பெற்றுள்ளனர். நிரந்தரமாக ஓர் ஆசிரியை உள்ளார். அதேவேளை, தரம் 9,10,11,12 வகுப்பு மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றார்கள். அறநெறிப் பாடசாலையும் நடைபெறுகிறது.

யாழ். பருத்தித்துறைச் சாலையில் நெல்லியடிக்கும் மாலுசந்திக்குமிடையில் இவ்வில்லம் அமைந்துள்ளது. அமைதியான மாஞ்சோலையும் அழகிய தியான மண்டபம், விருந்தினர் விடுதி, பணிமனை, பேருந்து தரிப்பிடம், உணவு விடுதி, முதியோர் இல்லம், பெண்கள் விடுதி, ஆண்கள் விடுதி இவைகளுக்கு மையமாக முருகன் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. 2003ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சராக இருந்த திரு.தி.மகேஸ்வரன் அவர்களால் எமக்கு 50 இருக்கைகள் கொண்ட பேருந்து வடமராட்சி மாணவர்களின் கல்விச் சுற்றுலாக்களுக்கும் கலாசார நிகழ்வுகளுக்கும் சேவைநோக்குடன் குறைந்த கட்டண அறவீட்டுடன் சேவையில் ஈடுபடுத்துவதற்காக அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்த மூன்று வருட காலத்தில் யாழ். குடாநாட்டில் உள்ள அநேகமான பாடசாலைகள் இதன் பயனைப்பெற்றுள்ளன. விசேட தினங்களில் எமது இல்லச்சிறார்கள், முதியோர்கள் வல்லிபுரக் கோயில், சந்நிதி, நல்லூர், ஈழத்துச் சிதம்பரம், பொன்னாலை வரதராஜப்பெருமான், மாவிட்டபுரம், கீரிமலை நகுலேஸ்வரம், ஆஞ்சநேயகர் கோயில் போன்ற வணக்க ஸ்தலங்களுக்கும் கசூரினா பீச், பூங்கனிச் சோலை போன்ற பொழுதுபோக்கு இடங்களுக்கும் எமது பேருந்தில் அழைத்துச் சென்றிருக்கின்றோம்.

யாழ்ப்பாணம் அரிமா கழகம் ஒவ்வொரு வருடமும் லியோ கழக மாணவர்களுடன் எமது இல்லத்திற்கு வந்து முழுநாளையும் அவர்களுடன் செலவழித்து உண்டுகழித்து பரிசில்களையும் வழங்கிச் செல்வர். எமது இல்லம் அரச நிதியாகப் பெறும் தொகையுடன் அன்புள்ளம் கொண்ட பலர் தமது அன்புக்குரியவர்களின் நினைவு தினங்களுக்காகவும் பிள்ளைகளின் பிறந்ததினங்களுக்காகவும் திருமண நிறைவ நாள்களுக்காகவும் செய்யும் நிதி உதவியாலும் வர்த்தகப் பெருமக்கள், வெளிநாடுகளில் இருந்து வரு ஒரு சில வள்ளல்களின் உதவியாலும் நிறைவாக எம்மால் இவைகளையெல்லாம் செய்யமுடிகின்றது. எமக்கு இன்னும் பல தேவைகள் உள்ளன. இன்றைய சிறப்பு மலரைப் பார்க்கும் அனைவரும் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

எமது தர்மகார்த்தாக்கள் சபை உறுப்பினர்கள் அனைவரும் ஊதியமின்றி தமது பரிபூரணமான சேவையை வழங்குகின்றனர். அதேவேளை, சிறிய தொகையைத் தொண்டூதியமாகப் பெற்றுக் கொண்டு சேவை செய்யும் ஊழியர்களின் பங்களிப்பும் அளப்பரியது.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், கரவெட்டி - பருத்தித்துறை பிரதேச செயலர்கள், சமூக சேவை உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் போன்றோரின் ஆலோசனைகளும் வழிநடத்தலும் எம்மைச் சிறப்பாகச் செயற்பட உந்துசக்தியாக அமைந்துள்ளது. எதிர்காலத்திலும் அவர்களது உதவிகள் எமக்கிருக்கும் என நம்புகின்றோம். எமக்கு உதவிகள் செய்த அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மு.சுந்தரலிங்கம், *கௌரவ செயலாளர்*


சிறப்பு மலருக்கான அனு

| | |
|---|---|
| 1. திரு.சி.தங்கராசா, தங்கம்ஸன் - நெல்லியடி. | 6. திரு.மு.இராஜகோபால், ஜமுனா ஸ்ரோர்ஸ் - நெல் |
| 2. திரு.சி.க.நாகராசா, ஜனனி பல்பொருள் வாணிபம் - நெல்லியடி. | 7. திரு.R.குமரேஸ்வரன், ஸ்ரீகிருஸ்ணா கிறீம் ஹவுஸ் |
| 3. திரு.சி.அகிலன், நெல்லை சில்க் - நெல்லியடி. | 8. திரு.சி.சிவம், சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - |
| 4. திரு.ச.பிறேம், செல்லமுத்து புடைவை மாளிகை - நெல்லியடி. | 9. திரு.R.பாலகிருஷ்ணன், கலைவாணி கண்ணாடிக் |
| 5. திரு.செ.இராஜேந்திரன், N.S.R. - நெல்லியடி. | 10. திரு.M.கதிரமலை, "மலர்ஸ்", அன் "கதிரவன்ஸ் |

(#/48707)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# -முதியோர் இல்ல ஆச்சிரமம் - வதிரி, கரவெட்டி
# வது ஆண்டு விழாவும்
# பதினோராவது குருபூசைத் தினமும்

## பேருதவி புரியுங்கள்!



ஸ்ரீமத் பாகவத புராணத்தில் ஒரு முக்கியமான சம்பாஷனை வருகின்றது. 'சுவாமி தாங்கள் கண்ணபரமாத்மா மீது அளவுகடந்த அன்பு வைத்திருந்தும் வீடிழந்து, நாடிழந்து காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதே. அதற்கு யாது காரணம்?' என்று தர்மரைப் பார்த்துத் திரௌபதை கேட்கிறாள்.

'தேவி இந்த அழகான அருவிகள் எந்தப் பலனை எதிர்பார்த்து அழகுடன் காட்சியளிக்கின்றன? இந்த மலர்கள் எதனை எதிர்பார்த்து நறுமணம் வீசுகின்றன? இந்த இனிய தென்றலானது எதனை எதிர்பார்த்து இதமாக வீசுகின்றது? அதுபோலவே நானும் எப்பிரதிபலனையும் எதிர்பாராது கண்ணன்மேல் பக்தியைச் செலுத்துகின்றேன். மற்றையவை எமது கர்ம பலனின்படி நடக்கின்றன;' என்று தர்மபுத்திரர் பகர்கின்றனார்.

அதுபோலவே சுவாமி ஸ்ரீ பரமானந்த அவர்களும் வதிரி ஆச்சிரமத்தை உருவாக்கியபோது பலரும் பல விதத்தில் அவரை விமர்சனஞ் செய்தனர். முட்டுக்கட்டைபோட முனைந்தனர். ஆனால் சிறு சலனத்திற்கும் உட்படாமல் சேவையே பெருதெனக் கருதி எவ்வித பிரதியுபகாரமும் எதிர்பாராது நலிந்தவர்களுக்கான தன் சேவையைச் சுவாமிகள் சலிப்பின்றி ஆற்றிவந்தார். யுத்தத்தாற் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கும் ஆச்சிரமம் ஆற்றிய பணிகள் ஏராளம். இவையெல்லாவற்றிற்கும் மூலகாரணம் சுவாமி அவர்கள் காட்டிய பேரன்பேயாகும்.

சுவாமிகள் இறைவனிடம் கொண்ட அளவற்ற பக்தி காரணமாக ஆச்சிரமத்திலேயே ஓர் ஆலயத்தை அமைத்தார். சிறார்களைச் சமய நம்பிக்கையுடையவர்களாக உருவாக்கும் நோக்குடன் பஜனை வகுப்புகளை நடத்தினார்.

சுவாமிகள் இறைவனின் பேரருளைப் பெற்றவர் என்பதற்கு அவர் சமாதியடைந்த பின்னர் பல மணி நேரங்கள் கழிந்த பின்பும் அவர் புகழுடம்பில் தோன்றிய தேஜஸ் ஒன்றே போதிய சான்றாகும்.

ஆச்சிரமமானது புதிய நிர்வாகத்தின்கீழ் கடந்த சில மாதங்களாகச் சிறப்பாக இயங்கிவருகின்றது. நிர்வாகம் இன்னும் ஆற்றவேண்டிய பணிகள் பல இருக்கின்றன. இப்பணிகள் சிறப்புற நடைபெற கடந்த காலத்தின் பேருதவி புரிந்த பெரியார்களுக்கு எம் நன்றியையும் பாராட்டுதலையுந் தெரிவிப்பதோடு, தொடர்ந்து பேருதவி புரிந்திட முன்வர வேண்டுமென நல்லுள்ளங்கொண்டவர்களை வேண்டி நிற்கின்றோம்.

சுவாமியின் நல்லருள் நானிலமெங்கும் பல்கிப் பெருகிட அவரை இறைஞ்சுகின்றேன்.

செல்லமுத்து ஸ்ரீநிவாசன்
*Dip.M. (UK), B.A., S.L.A.S.*

## பிரதேச செயலரின் வாழ்த்துரை



*வதிரி பரமானந்த ஆச்சிரமத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ பரமானந்த சுவாமிகளின் 11 ஆவது சிரார்த்ததினம் அனுஷ்டிக்கப்படும் இந்நாளில் அவர்களால் ஆற்றப்பட்ட அரும் பெரும் சேவைகளைப் பாராட்டி வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.*

*நாதியற்ற சிறார்களையும் ஆதரவற்ற முதியோர்களையும் பாதுகாக்கும் இல்லம் அமைத்து உணவு, உடை தந்து, கல்வி அளித்து, நோயுற்ற வேளைகளில் சிகிச்சை தந்து அன்பினையும் கருணையினையும் ஆதரவினையும் வழங்கிய மனிதருள் தெய்வமானவர் ஸ்ரீ பரமானந்த சுவாமிகள் என்றால் மிகையல்ல.*

*சுவாமிகள் ஆரம்பித்து வைத்த மகத்தான பணிகளை இன்றும் சளைக்காமல் தொடர்ந்து வரும் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகத்தினரை மனமாரப் பாராட்டுவதுடன், இப்பணிகள் மேலும் சிறக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.*

இ.வரதீஸ்வரன்
*பிரதேச செயலாளர்*
*பருத்தித்துறை.*

## வட இலங்கை ஸ்ரீ பரமானந்த சிறார், முதியோர் இல்ல ஆச்சிரம தர்மகர்த்தாக்கள் சபை

கௌரவ தலைவர் திரு.செ.ஸ்ரீநிவாஸன் Dip.M.(U.K.), B.A., S.L.A.S.
கௌரவ உப தலைவர் திரு.த.அரிபிரசாதம் J.P.
கௌரவ செயலாளர் திரு.மு.சுந்தரலிங்கம் J.P.
கௌரவ உப செயலாளர் திரு.மா.சிவசண்முகம்
கௌரவ பொருளாளர் திரு.கி.நடராசா M.A.
கௌரவ உறுப்பினர்கள் டாக்டர் மா.யோகீஸ்வரதேவன்
டாக்டர் ந.பத்மநாதன் J.P.
லயன் சி.ந.கதிரவேலு J.P.
திரு.ந.பாஸ்கரன்
திரு.க.குமாரசாமி
திருமதி ரஞ்ஜினி விஜயகுமாரன்

**வங்கியாளர்: மக்கள் வங்கி நெல்லியடி**
**க/இ. 2022 & 1797**



அறநெறி விழாவில் பரிசில்களுடன்...



அறநெறி விழாவில் பரிசில்களுடன்...


ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம தர்மகர்த்தாக்கள் சபை

## வட இலங்கை ஸ்ரீ பரமானந்த சிறார், முதியோர் இல்லத்தின் வரலாற்றுச் சுருக்கம்

*வட இலங்கை ஸ்ரீ பரமானந்த சிறார், முதியோர் இல்லம் 1969ஆம் ஆண்டு சுவாமி பரமானந்தரால் நிறுவப்பட்டது. பம்பாயைச் சேர்ந்த மகாரிஷி கணேஸ்பூரி அவர்களின் சீடரான பரமானந்தர் வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்ப காலங்களில் இல்லத்தின் நிர்வாக முழுப் பொறுப்பும் சுவாமிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏறக்குறைய இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் இயற்கை அழகோடு சாதாரண குடிசைகளினால் அமைக்கப்பட்டிருந்தது. காலப்போக்கில் சுவாமிகளினது இடைவிடாது முயற்சியினாலும் தன்னலமற்ற சேவையினாலும் வானளாவும் நெடுநிலை மாடங்களாக கட்டியமைக்கப்பட்டது. ஆதரவற்ற நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கும் பராமரிப்பதற்கு வசதியற்ற முதியோர்களுக்கும் இவ்வில்லம் புகலிடமாயிற்று. அரசின் சொற்ப உதவியோடும், தர்ம சிந்தனை படைத்த பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவியோடும் சுவாமிகளின் சமூகப்பணி அபூர்வ சாதனையென்றே கூறப்படவேண்டும்.*

*சிறார் மனைகளில் சேர்க்கப்படும் பிள்ளைகளுக்கு உண்டியும், உறையுளும் அளித்து, கற்க வல்ல சான்றோராக்கி சொந்தக் காலில் ஊன்றி நிற்கக்கூடிய மனித நேயமிக்க மானிடர்களை உருவாக்குவதையே இல்லம் நோக்கமாகக் கொண்டிருந்தது. கடந்த காலத்தைப் பின்னோக்கிப் பார்க்கும்பொழுது, சுவாமிகளினால் வளர்த்தெடுக்கப்பட்ட பல பிள்ளைகள் திருமணமாகி குடும்ப வாழ்க்கையில் சுகந்திரமாக வாழக்கூடிய வகையில் சுவாமிகளால் வகை செய்யப்பட்டிருந்தது. அவரது காலத்தில் ஆண் பிள்ளைகளுக்கு வேறாகவும், பெண் பிள்ளைகளுக்கு வேறாகவும் இல்லம் அமைக்கப்பட்டிருந்தது. முதியோர் இல்லம், சமையற்கூடம், உணவு பரிமாறும் இடம், நிர்வாகக் கூடம், தியான மண்டபம், முருகன் ஆலயம் எனப் பல வசதிகளோடு இல்லம் வளர்ச்சியடைந்திருந்தது.*

*இல்லம் பரந்து வளர்ந்துவிட்ட பெரு விருட்சமாக மாறியது. சகல பொறுப்புகளையும் தனியொரு மனிதன் தாங்குவது கஷ்டமானது என்பதை சுவாமிகள் உணர்ந்து கொண்டார். தன் பொறுப்புகளைப் பலருடன் பகிர்ந்துகொள்ள சுவாமிகள் விரும்பினார். இதனால் இல்லத்திற்கான சொத்துகளையும், நிர்வாகத்தினையும் தர்மசாதனம் செய்து பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதிவாய்ந்த பெருமக்கள் சிலரிடம் சட்டரீதியாக ஒப்படைக்க முன்வந்தார்.*

*இச்சாதனம் 19.02.1982 இல் உருவாக்கப்பட்டது.*

*மிகக் கட்டுக்கோப்பாக வரையப்பட்ட தர்ம சாதனத்தில் தர்ம கர்த்தாக்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என நுணுக்கமாக வரையறுக்கப்பட்டிருந்தது. சுவாமிகள் சமாதி நிலை அடைந்த பின்னர் ஏற்கனவே சுவாமிகளால் உருவாக்கப்பட்ட தர்மசாதனம் காலத்திற்கேற்றவகையில் சிற்சில மாற்றங்களுடன் திருத்தி அமைக்கப்பட்டது. தர்ம சாதனத்தில் மிகப்பெரிய பொறுப்புகள் உள்ளன. தர்மகர்த்தாக்கள் தனித்தனி தாங்கள் நினைத்தபடி செயற்படுத்தமுடியாது. ஒருவரின் செயல் சகல தர்மகர்த்தாக்களையும் பாதிக்கும் கூட்டுப் பொறுப்புணர்வுடையது. முறையீனமாகவோ தர்மத்திற்கு நட்டம் விளைவிக்கக் கூடிய முறையிலோ நடந்துகொள்ளும் தர்ம கர்த்தா சபைக்கெதிராகப் பொதுமக்கள் மாவட்ட நீதி மன்றத்தில் வழக்குத் தொடரவும் வகை செய்யப்பட்டிருந்தது.*

*எதிர்காலத்தில் இவ்வில்லம் நன்சேவைகளை விஸ்தரிக்க உள்ளது. முதியோர் இல்லங்களை நவீனமயப்படுத்துதல், சிறார்களின் கல்வி நடவடிக்கைகளை விஸ்தரித்தல், குறிப்பிட்ட வயதின் பின்னர் சொந்தமாகத் தொழில் செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மருத்துவபீடமொன்றை அமைத்து இவற்றோடு தாதியர் சேவையை அறிமுகப்படுத்தல், சிறார்களுக்கான தகவல் தொழில்நுட்பக் கல்வியை விருத்தி செய்தல் போன்ற செயற்திட்டங்களை உருவாக்கவுள்ளது.*

கி.நடராசா
*கௌரவ பொருளாளர்.*

## அனுசரணையாளர் விவரம்:

நெல்லியடி.
ஹவுஸ் - நெல்லியடி.
ல - நெல்லியடி.
ாடிக் களஞ்சியம் - நெல்லியடி.
வன்ஸ்" - நெல்லியடி.

11. திரு.நா.தெய்வேந்திரம், 'இந்திரர் கபே' - நெல்லியடி.
12. திருமதி வ.பரமேஸ்வரி, 'வல்லிபுர்வாசா' - கொடிகாம வீதி, நெல்லியடி.
13. திரு.க.சத்தியசீலன், பொன்.கந்தையா வீதி, நெல்லியடி.
14. வங்கிச் சதுக்க வர்த்தகர்கள் - பருத்தித்துறை.
15. திரு.V.சாந்தலிங்கம், சாறாஸ் - நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTER EXPRESS
## Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

# Diploma in Video Mixing

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் Video Editing தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால். கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
*10/04/2006 :- 08.30*



இதோ அறிமுகப்படுத்துகின்றோம்
**சிதார வர்ம தைலம்**
உடைவு, முறிவு, வீக்கம், சுளுக்கு, இரத்தக்கட்டு, முழங்கால் மூட்டுவலி, குதிக்கால் வலி ஆகியவைகளுக்கு காலை, மாலை பூசி வரவும்.
Reg.Number 10171 ARPR No.228
(வெளிப்பிரயோகத்திற்கு மட்டும்)
சந்தைப்படுத்துவோர்:
**சிவா நறுமணப்பூங்கா,**
*288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
T.Phone: 222 2567
*சகல பார்மஸிகளிலும் கிடைக்கும்.*
(சி/48632)(32-45)


## நிர்வாக அலுவலர் நியமனம்

தென்மராட்சிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராக க.கார்த்திகேசு நியமிக்கப் பட்டுள்ளார்.

நிர்வாக உத்தியோகத்தராகக் கடமை யாற்றிய ச.வீரசிங்கம் அண்மையில் இளைப் பாறியதையடுத்து இப்பதவிக்கு இவர் நிய மிக்கப்பட்டுள்ளார்.

இவர் பட்டதாரி சேவையில் உள்ளீர்க்கப் பட்ட சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் தரத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக் கது. (ஒ-117)(32)

## பதினோராம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 - 05 - 1937 | 10 - 04 - 1995 |



**அமரர் ஆறுமுகம் ஜெயரத்தினம்**
*(முன்னாள் இலங்கை வங்கி, உதவி முகாமையாளர்)*

பதினொரு ஆண்டுகள் சென்றுவிட்டாலும்
இன்னமும் உங்கள் பாசத்திற்கும் பரிவிற்கும்
ஏங்கும் உங்கள் குடும்பத்தினர்.

*66/2, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.* (48070)(32-45)

**குடும்பத்தினர்.**

## கண்ணிவெடி அபாயச் செயலமர்வு

தென்மராட்சி,ஏப்.8

தென்மராட்சிக் கல்வி வலயப் பாட சாலைகளின் அதி பர்களுக்கு கண்ணி வெடி அபாயக் கல் விச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்தச் செயலமர்வு நடைபெறும். (எ-117)(32)

## பயிற்சிப் பட்டறை

தென்மராட்சி,ஏப்.8

தென்மராட்சிப் பிரதேச கிராம அலுவலர் களுக்கான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (எ-117)(32)

## செஞ்சிலுவைச் சங்க கிளைக் கூட்டம்

வலி.தென்மேற்கு,ஏப்.8

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் வலிகாமம் மேற்கு பிரிவுக் கிளைக்கான வருடாந்த பொதுக்கூட் டம் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரிவுக்கிளைத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத் தில் யாழ்.மாவட்ட கிளைப் பிரதிநிதிகள் உட் பட மற்றும் பலர் கலந்துகொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-135)(32)


# COMPUTER EXPRESS
## Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

# மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ~ 2006

80% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office<br>750/=<br>Duration :- 3 Months | Diploma in Desktop Publishing<br>~~6000~~/= 1200/=<br>Duration :- 4 Months | Diploma in Web page Designing<br>~~7000~~/= 1400/=<br>Duration :- 4 Months |
| Diploma in Graphic Designing<br>~~7000~~/= 1400/=<br>Duration :- 4 Months | Diploma in Hardware Engineering<br>~~6000~~/= 1200/=<br>Duration :- 3 Months | Accounting Package<br>~~7000~~/= 1400/=<br>Duration :- 3 Months |
| Diploma in Computer Science<br>~~7000~~/= 1400/=<br>Duration :- 4 Months | Honors Diploma in Computer Science<br>~~9000~~/= 1800/=<br>Duration :- 5Months | Diploma in Auto CAD<br>~~6000~~/= 1200/=<br>Duration :- 3 Months |

## Advances Courses

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

April 30ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

வகுப்புகள் ஆரம்பம்

| | |
|---|---|
| Batch II | - 09/04/2006 |
| Batch III | - 15/04/2006 |
| Batch IV | - 16/04/2006 |
| Batch V | - 21/04/2006 |



## விற்பனையாளர் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை. (ஆண்கள் மட்டும்)

- வெளி இடங்களில் இருப்பவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.

**த.குமாரசாமி அன் சன்ஸ்,**
*248/1, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.*





# கிறீன் பலஸ் எம்போறியம்

*யாழ் நகரில் குறைந்த விலையில்*
*நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத தரங்கள்! அழகிய*
*புடைவைத் தினுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்*

**பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.**



(சி/48693)





## SATS- TECH இன் சிறப்புத் தள்ளுபடி விற்பனை மற்றும் பரிசுத்திட்டம்

KU BAND டிஸ் அன்ரனா சிஸ்டம்
*உத்தரவாதத்துடன்
** ரூபா 9000/= மட்டுமே

இலவசம்!
தெரிந்து எடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிக்கு இன்னும் ஒரு சிஸ்டம் இலவசம்

* ஒருவருட உத்தரவாதம் முடிந்த பின்னரும் திருத்தம் செய்வதற்கான உதிரிப்பாகங்கள் எம்மிடம் கிடைக்கும்.
* இச்சலுகை ஏப்ரல் 15 வரை மட்டுமே.

(48340)

கேபிள் ரீவிக்கு உரிய அனைத்துத் தரமான உபகரணங்களும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்

**SATS - TECH** நிறுவனமானது இலங்கையில் செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் **T.V.** உபகரணங்களை நேரடியாக இறக்குமதி செய்து உத்தரவாதத்துடன் விற்பனை மற்றும் திருத்தம் செய்ய **TRC** இன் **Vendor Licence** (02244/06/N) உள்ள ஒரு நிறுவனமாகும். (48340(51-11-18-14)

மேலதிக விபரங்களுக்கு: SATS - TECH ENGINEER (நஷனல் விடியோ சென்ரர்) 182, கே.கே.எஸ். வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5908 Hot Line: 0777-710785

SATS TECH ENGINEERS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்கா அரசு யுத்தத்தைத் திணித்தால் அதனை எதிர்கொள்வதற்கு புலிகள் தயார்!

## வவுனியா கட்டளைத் தளபதி வேலவன் உறுதி

புளியங்குளம்,ஏப்.8

சிறிலங்கா அரசு யுத்தத்தைத் திணித்தால் அதனை எதிர்கொள்ள விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர் - இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்டக் கட்டளைத் தளபதி க.வேலவன்.

கனகராயன்குள பிரதேச மக்கள் அண்மையில் களமுனையில் போராளிகளைச் சந்தித்து அவர்களுக்கு அன்பளிப்புப் பரிசில்களை வழங்கினர்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்துகையிலேயே மாவட்டக் கட்டளைத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்:-

எமது தலைமை ஏற்படுத்தியுள்ள சமாதான நிலையைக் குழப்பி யுத்தத்தை சிறிலங்கா அரசு தொடங்கினால் நாம் எம் பின்னால் அணி திரண்டு நிற்கும் மக்களின் முழுமையான பலத்துடன் நிச்சயம் வெற்றிகொள்வோம் - என்றார்.

வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ஞானம் தலைமையில் விளக்குவைத்த குளம் முன்னரங்கத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா மாவட்ட துணைத் தளபதி ஆதவன், தளபதிகளான வல்லவன், அப்பன், விடுதலை, குமணன் மற்றும் போராளிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். அத்துடன் நூற்றுக்கணக்கான மக்களும் பங்கேற்றனர். (ஒ-355)(25)

## கல்விமாணிப் பட்டப் பரீட்சை நிலையம் மாற்றம்

வட்டகச்சி,ஏப்.8

முல்லைத்தீவில் இன்று இடம்பெறவுள்ள கல்விமாணிப்பட்டப் பயிற்சி நெறியின் முதலாம் ஆண்டுப் பரீட்சைக்கான நிலையம் ஒன்று மாற்றப்பட்டுள்ளது.

இதன்படி அனுமதி அட்டையில் மாங்குளம் மகாவித்தியாலயத்தைப் பரீட்சை நிலையமாகக் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இன்று பரீட்சைக்குத் தோற்றும்படி முல்லை வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.நாகரத்தினம் தெரிவித்துள்ளார். (23)




## வைத்தியசாலைகளுக்கு உபகரணங்கள்

கிளிநொச்சி, ஏப்8

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் நோர்வேயின் நிதியுதவியுடன் கிராமிய வைத்தியசாலைகளுக்கு பல்வேறு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அடம்பன், கற்சிலைமடு, பிரமந்தனாறு, கதிரவெளி ஆகிய இடங்களிலுள்ள கிராமிய வைத்தியசாலைகளுக்கு கடந்த 4ஆம் திகதி இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அச்சுப்பதிப்புக் கருவிகள், மருந்துப் பெட்டிகள், மின்பிறப்பாக்கிகள், சுழல் நாற்காலிகள், கணனிகள், பிராணவாயுக் கொள்கலன் தொகுதிகள் போன்ற உபகரணங்களே வழங்கப்பட்டன. (ஒ-202)(23)

## கணனிக் கற்கை நெறி

வட்டக்கச்சி, ஏப்8

கிளிநொச்சி ரி.ஆர்.ரெக் நிறுவனத்தினர் தகுதியானவர்களிடமிருந்து புதிய கணனிக் கற்றைநெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைப்பதற்கான இறுதித் திகதி இன்று சனிக்கிழமை என நிறுவன இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-405-202)

# ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான பாடச் செயலமர்வுகள்

கிளிநொச்சி,ஏப்.8

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள கணித மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளின் மாணவர்களுக்கான செயலமர்வுகள் நாளை முதல் எதிர்வரும் 12ஆம் திகதிவரை வன்னிப் பிரதேசத்தில் இடம்பெறவுள்ளன.

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் தொண்டைமானாறு வெளிக்கள ஆய்வு நிலையம் இச் செயலமர்வுகளை நடத்தவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கிளிநொச்சி துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில், முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கும் உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் செயலமர்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இரசாயனவியலும் பிற்பகல் 12.30 மணிமுதல் 4.30 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் உயிரியல் மற்றும் இணைந்த கணிதமும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் பௌதிகவியலும் இடம்பெறும்.

நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 8 மணிமுதல் 12 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பௌதிகவியலும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் உயிரியல் மற்றும் இணைந்த கணிதமும் பிற்பகல் 12.30 மணி முதல் 4.30 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இரசாயனவியலும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் உயிரியலும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி முதல் 12 மணிவரையும் 12.30 மணிமுதல் 4.30 மணிவரையும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இரசாயனவியலும் பிற்பகல் ஒரு மணிமுதல் 5 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் உயிரியலும் இடம்பெறும்.

எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 8 மணி முதல் 12 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் உயிரியல் பாடம் இடம்பெறும்.

குறித்த பிரிவு மாணவர்களை இச் செயலமர்வுகளில் கலந்துகொண்டு பயன்பெறுமாறும் -

மேலதிக விவரங்களுக்கு மாவட்ட மாணவர் அமைப்புச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் -

தமிழீழ மாணவர் அமைப்பினர் அறிவித்துள்ளனர். (ஒ)(30)

# காசநோய் விழிப்புணர்வு மாதம் தமிழீழ சுகாதாரசேவை பிரகடனம்

கிளிநொச்சி,ஏப்.8

தமிழீழ சுகாதார சேவையினர் இம் மாதத்தை காசநோய் விழிப்புணர்வு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

சர்வதேச ரீதியில் காசநோயின் தாக்கம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. தமிழீழப் பிரதேசத்தில் இந்நோயின் தாக்கத்தை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனவே ஏப்ரல் மாதத்தை காசநோய் விழிப்புணர்வு மாதமாகப் பிரகடனப்படுத்தி பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொள்ள சுகாதார சேவையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

2008 ஆம் ஆண்டில் தமிழீழப் பிரதேசத்தில் காசநோயைப் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் நோக்கத்தை இலக்காகக் கொண்டு தமிழீழ சுகாதார சேவையினர் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-202)(25)

# விளையாட்டு நிகழ்வுகள்

வட்டக்கச்சி,ஏப்.8

வட்டக்கச்சி மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் க.கனகசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி கலந்துகொள்வார். (3-405) (24)

* * *

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டிகள் நாளையும் மறுதினமும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகி உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.டபிள்யூ.விமலராஜன் கலந்துகொள்வார். (3-72)(24)

* * *

கோப்பாய்,ஏப்.8

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுற்குட்பட்ட கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் ஓர் அங்கமாக மரதன் ஓட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்குப் பிரதேச செயலக முன்றிலிருந்து நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்புபவர்கள் அன்றைய தினமே பெயர்களைப் பதிவுசெய்து போட்டியில் கலந்துகொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டது. (3-72)

* * *

அரியாலை 87 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**இன்று**

பிற்பகல் 4 மணி கே.கே.எஸ். வி.க. எதிர் அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க.

மாலை 5 மணி - ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. எதிர் அரியாலை ஐக்கிய வி.க. (மஞ்சள்) (25)

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் 'ரெக்கி' வெற்றிக்கிண்ணத்திற்கான 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் இன்றும் நாளையும் முற்பகல் 9.30 மணிமுதல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளன.




லீக் முறையில் நடைபெறவுள்ள இச் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**இன்று-** ✱ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி மைதானத்தில் - ஜெலிஸ்ரார் வி.க. எதிர் ஓல் கோல்ஸ் வி.க.

✱ சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் - ஸ்ரான்லி வி.க. எதிர் ஜொனியன்ஸ் வி.க.

✱ யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் - கிறாஸ்கொப்பஸ் வி.க. எதிர் கே.ஸி.ஸி.ஸி. வி.க.

**நாளை-** ✱ யாழ். மத்திய கல்லூரி மைதானம் - யாழ். சென்ரல் வி.க. எதிர் மானிப்பாய் பரீஸ் வி.க. (3-190)(24)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.7

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 13, 19, 17 வயதுப் பிரிவினருக்கான லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**இன்று-** 13 வயதுப் பிரிவு - மாலை 4.15 மணி சுனாமி (பி) அணி எதிர் விடிவெள்ளி (பி) அணி

19 வயதுப் பிரிவு - மாலை 5.15 மணி: ப்றீடம் அணி எதிர் சுனாமி அணி

17 வயதுப் பிரிவு - மாலை 6 மணி: சண்றைஸ் அணி எதிர் சுனாமி அணி

**நாளை** -15 வயதுப் பிரிவு - மாலை 4.15 மணி: வீனஸ் அணி எதிர் விடிவெள்ளி அணி

19 வயதுப் பிரிவு - மாலை 6 மணி: கிங்ஸ்ரார் [illegible] (3-190)(25)

# உதைபந்தாட்ட தலைவருக்கு புலிகளின் நினைவுப் பரிசில்

கிளிநொச்சி, ஏப்.8

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜோசப் பிளாட்டருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் நினைவுப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

களுத்துறையில் வைத்து விடுதலைப்புலிகளின் சார்பில் கலாநிதி நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் இந்த நினைவுப்பரிசிலை வழங்கினார்.

ஆழிப்பேரலை பாதித்த மக்களுக்கான உதைபந்தாட்ட ப்பயிற்சி நிலையங்கள் அமைப்பதற்கான செயற்றிட்டத்தை கையளிக்கும் நிகழ்வில் அவர் கலந்துகொண்டார். இந் நிகழ்வில் கலாநிதி எதிர்வீரசிங்கத்துடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடினார்.

வடக்கு - கிழக்கில் விளையாட்டுத்துறை அபிவிருத்தி, தேவைகள் என்பன தொடர்பாக கலாநிதி நா. எதிர்வீரசிங்கத்திடம் ஜோசப் பிளாட்டர் கேட்டு அறிந்துகொண்டார்.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிதியுதவியுடன் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் பயிற்சி நிலையங்கள் அமைப்பதற்கான இச் செயற்றிட்டத்தில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் எட்டு உதைபந்தாட்ட லீக்குகளும் ஸ்ரீலங்காவில் இருந்து 9 லீக்குகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் -

வடக்கு - கிழக்கில் தெரிவுசெய்யப்பட்ட எட்டு உதைபந்தாட்டப் பயிற்சி நிலையங்களும் வடக்கு - கிழக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் ஊடாக அமைக்கப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக மன்னார் மாவட்ட 15 வயதுக்குட்பட்டோருக்கும் களுத்துறை மாவட்ட 15 வயதுக்குட்பட்டோருக்குமான கடற்கரை உதைபந்தாட்டப் போட்டி ஒன்றினையும் ஜோசப் பிளாட்டர் பார்வையிட்டார். இந்த ஆட்டத்தில் களுத்துறை மாவட்ட அணி 2:1 என்ற கோல் கணக்கில் மன்னார் அணியை வெற்றியீட்டியது. இந் நிகழ்வில் கலந்துகொண்ட உதைபந்தாட்ட லீக்குகளின் இளையோர் அணிகளுக்கு ஒரு தொகுதி உதைபந்துகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (3-203) (27)

## தவக்காலச் சிந்தனை 39

### நலிந்தோரின் இரத்தம் விடுதலைக்கு வித்தாகட்டும்

இறந்த இலாசருக்கு உயிரைத் தந்தவரின் உயிரை எடுப்பதற்கு இருண்ட மனங்கள் திட்டம் தீட்டுகின்றன. 'இனத்திற்காக ஒரு மனிதனை இழப்பது தவறல்ல' வேதாளம் கூட ஞானம் பேசும் என்பதற்குத் தலைமைக் குருவின் இச்சொற்கள் எடுத்துக்காட்டு. ஒரு நிறுவனமே முக்கிய நிறுவனத்தின் நன்மைக்காக தனி மனிதனை இழப்பது தவறல்ல என்பது சில நேரங்களில் தம் தவறான முடிவுகளுக்கு நியாயம் கற்பிப்பது இல்லையா? நம் செயல்களும் வார்த்தைகளும் நமது மனத்தின் ஒத்திகையை வெளிப்படுத்துபவை. எனவே, உள்ளத்தின் ஆழத்தில் அவை உருவாகும் நோக்கத்தை உரசிப்பார்ப்பது அவசியம்.

சதுசேயர்கள் அரசியலில் ஆர்வம் உடையவர்கள். தலைமைச் சங்கத்தில் சதுசேயர்தான் பெரும்பான்மை பலமுடையவர்கள். இயேசுவின் பின் அனைவரும் சென்றுவிட்டால் தமக்குத் தொண்டர்கள் குறைந்து மாற்றுத் தலைமை உருவாகும் என அஞ்சி இயேசுவை அழித்து விடத் திட்டமிடுகின்றனர். இதை நிறைவேற்ற இரண்டு கருத்துகளை மக்கள் முன் வைக்கின்றனர். முதலாவது இவன் பக்கம் மக்கள் சென்றால் உரோமையர்கள் எருசலேமையும் யூத மக்களையும் அழித்து விடுவர். இரண்டாவது இடமும் இனமும் காப்பாற்றப்பட ஒருவர் இறப்பது நலம் என்பது. தங்களது சுயநலத்துக்கு 'பொதுநலம்' என்ற முலாம் பூசினர்.

இயேசு என்ற தனிநபரின் சாவு உலக மீட்பிற்கு வித்தாக அமைந்தது. இன்றும் நலிந்தோர் சார்பாக நிலைப்பாடு எடுப்போர் தீர்த்துக்கட்டப்படுகிறார்கள். இவர்கள் சிந்தும் இரத்தம் உலக விடுதலைக்கு வித்துகளாகும் என்ற நம்பிக்கையை இயேசுவின் வாழ்வு தருகிறது.

- ம.நியூட்டன், *சில்லாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும்



## கலை இலக்கியப் பெருவிழா 2006



### ஆதீன முதல்வரின் அருளாசி



அன்புசால் பெருந்தகையீர்,

வேலணை தீவகம் தெற்கு பிரதேச செயலகம் எமது பாரம்பரியங்களும் சம்பிரதாயங்களும் நலிவுறாது வளர்ச்சி பெற எடுக்கும் கலாசார விழாவினையிட்டு பேருவகையடைகின்றோம். தமிழரது பாரம்பரிய கலையும் கலாசார பண்பாடுகளும் ஒருங்கே மிளிரும் தீவுப்பகுதியின் இதயமாகக் காணப்படுகின்ற பிரதேசம் வேலணை பிரதேசமாகும்.

கலியுகவரதனாம் கந்தப்பொருமானின் அருள் ஒளி வீசி கதிரொளி பரப்பும் வேல் இங்கே அருளாட்சி புரிவதனால்தான் இந்த இடம் வேலணை என்று அழைக்கப்படுகின்றது. இப்பதியில் அமைந்திருக்கின்ற இப்பிரதேச செயலகம் தென் தீவகத்தில் முன்னெடுத்துச் செல்கின்ற சிறப்பான செயற்திட்டங்களில் இக்கலாசார நிகழ்வும் உன்னதமான தொன்றாகும்.

நாகரிக வளர்ச்சியின் பெயரால் சிதைவடைந்து செல்கின்ற எமது கலாசார விழுமியங்களைத் தகுந்த முறையில் எதிர்கால சமுதாயத்தினிடம் கையளிக்க வேண்டியது அவசியமானதாகும். இதற்கு இதுபோன்ற நிகழ்வுகள் பெரிதும் துணைபுரியும். எனவே, இக்கலாசார விழாவினில் தீவகம் வாழ் மக்கள் அனைவரும் கலந்து பயனடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இவ்விழா சிறப்புற நடைபெறவும், இவ்விழாவினை நடத்துகின்ற பிரதேச செயலகத்தின் பணிகள் சிறப்புறவும் இறைவன் ஆசீர்வதிப்பானாக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

### நற்பணிகளுடன் மேம்பட



தீவகம் தெற்கு பிரதேச செயலகத்தால் 08-04-2006 சனிக்கிழமை அன்று கலாசார விழா நடத்தப்படுவதையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது கலைகள், கலாசாரப் பாரம்பரியங்களை சமூகம் பேணுமாறு ஊக்குவித்தல் வேண்டும். இளம் சந்ததியினரையும் அதற்குத் தயார் செய்தல்வேண்டும். இவ்வகையில் சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட கலை கலாசார பேரவை கலைத் தொண்டாற்றிய கலைஞர்களை அடையாளம் காண்பதையும் அவர்களைப் பற்றிய விவரங்களைத் திரட்டி ஆவணப்படுத்துவதையும் முக்கியமான தொரு பணியாக உணர்ந்து செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இப்பேரவையுடன் இணைந்து செயற்படும் பிரதேச கலாசார பேரவைகளும் இத்தகைய பணிகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. தீவகம் தெற்கு பிரதேச கலாசார பேரவையும் இத்தகைய நற்பணிகளைச் செய்து வருவதுடன் கலைஞர்களைக் கௌரவிக்க இருப்பதையும் மனதாரப்பாராட்டி இந்நிகழ்வு சிறக்க வாழத்துகிறேன்.

**ஆ.சிவசுவாமி,**
மேலதிக அரச அதிபர், கலாசார பேரவை பிரதித் தலைவர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

### முத்தமிழ் ஏற்றம் பெற



வேலணைப் பிரதேச செயலகத்தினர் வேலணையில் கலை இலக்கிய பெருவிழாவினை எதிர்வரும் சனிக்கிழமை கொண்டாட உள்ளமையை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு காலத்தில் சகலதுறைகளிலும் 'கொடிகட்டிப் பறந்த' ஊர் காலவோட்ட அனர்த்தங்களால் மெலிந்து, உருவழிந்து காணப்படுவதை காணும்போது நெஞ்சம் கனக்கிறது. தற்போது புதிய தலைமுறை இளைஞர்கள் மற்றும் தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் பழமையை மதித்து புதுமைகளுடன் விழா எடுப்பதை அறிந்து நெஞ்சம் நிறைகின்றது. இப்பிரதேசவாழ் பழைய தலைமுறை தமிழ்ச் சான்றோர் கௌரவிக்கப்படவும் அதுகண்டு புதுத் தலைமுறையினர் எழுச்சிகொள்ளவும் இவ்விழா உதவும் என்பதில் ஐயமில்லை. மேலும் எமது பண்பாட்டு விழுமியங்கள் பேணப்படவும், முத்தமிழ் ஏற்றம்பெறவும் இவ்விழா துணைபுரிகின்றது. இப்பெருவிழா 'புகழ் சிறக்க, புகழ்போற்றி' இவ்விழா வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்**
கலைப் பீடாதிபதி, யாழ்.பல்கலைக் கழகம்.

### அரச அதிபரின் வாழ்த்து



பொதுமக்களுடன் மிகநெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களது தேவைகளை நிறைவேற்றுவன பிரதேச செயலகங்கள். இவ்வகையில் துன்பத்தால் துவண்ட மக்களின் கண்ணீரைக் கணிசமான அளவு துடைத்துள்ளோம் என்ற நம்பிக்கையுடன் வேலணைப் பிரதேச செயலகம் கலாசார விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதும் மலர் வெளியிடுவதும் பாராட்டுக்குரியது. மக்களை மகிழ்ச்சிப்படுத்த வகை செய்யும் இத்தகைய நிகழ்ச்சிகள் வரவேற்கப்படுகின்றன.

இப்பிரதேசசெயலர் பிரிவில் வாழும் ஒவ்வொரு பிரஜையினதும் வாழ்க்கைத்தரம் உயரவும் சமூக பொருளாதார, கலாசார குறிகாட்டிகள் உயர்நிலை அடையவும் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும் சமூக நலனோம்பு சேவைகள் வழங்கப்படும் நிலையிலிருந்து மக்கள் பங்களிப்புடனான நிலையான அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படக்கூடிய வகையில் பிரதேச மக்கள் தங்களை தாங்கள் உயர்த்திக்கொள்ள கலை நிகழ்வுகள் உந்துசக்தியாகத் திகழவேண்டும்.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற முதுமொழிக்கேற்ப வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் பணியாற்றும் அனைத்து அரச திணைக்களங்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் மக்களுக்கு ஒன்றுபட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றி அதிக நன்மைபெறும் வகையில் மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் இவ்விழா சிறப்புற நிகழ எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

**க.கணேஷ்,**
அரசஅதிபர். மாவட்டச் செயலகம். யாழ்.மாவட்டம்.

### மக்களை ஒன்றுசேர்க்கும் கலை நிகழ்வு



தீவகம் தெற்கு பிரதேச செயலகம் முன்னெடுக்கும் 2006 ஆம் ஆண்டின் கலை, கலாசாரப் பெருவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்கு வதனை முன்னிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மண்டைதீவு தொடங்கி நயினாதீவு ஈறாக பல்வேறு தீவுக்கூட்டங்களைச் சேர்ந்த மக்கள் மத்தியில் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களின் சான்றாக நின்று ஒளிரும் கலை கலாசாரத் தினைப் பேணி வளர்க்கவென கொண்டாடப்படும் இவ் விழா சிறப்பாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

பண்டைய காலத்தில் கலைகள் மக்களை ஒன்று சேர்க்கும் கருவிகளாகத் திகழ்ந்திருந்தன.உணர்ச்சிகளைத் தூண்டி புலன்களை நுண்ணுணர்வுடன் வளர்க்கும் தன்மை கொண்ட கலைகள் மனதைப் பண்படுத்தவும் வல்லன. அது மனித வாழ்வை செம்மைப்படுத்தும் பெரும் பொறுப்பைச் சுமந்துள்ளது.

கலைகளின் ஆற்றலும் ஆளுமையும் போற்றப்படவேண்டியதன் அவசியம் கருதியே இக்கலை கலாசார விழா கொண்டாடப்படுகிறது. இவ் விழா சிறப்புற மனதார வாழ்த்துகின்றேன்.

**மு.நந்தகோபாலன்,**
பிரதேச செயலர், பிரதேச கலாசார பேரவைத் தலைவர், பிரதேச செயலகம், வேலணை.

## கலை இலக்கியப் பெருவிழா - 2006

**இடம் :-** சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் - வேலணை
**காலம்:-** 08-04-2006 சனிக்கிழமை முற்பகல் 09.30 மணி (புதியநேரம்)

### நிகழ்ச்சி நிரல்

* மங்கல விளக்கேற்றல்
* அகவணக்கம்
* தமிழ்மொழி வாழ்த்து
* மங்கல இசை
* வரவேற்புரை
* ஆசியுரைகள்
* தலைமையுரை
* வரவேற்பு நடனம்
* இசையரங்கு
* பிரதம விருந்தினர் உரை
* கலை இலக்கியப் பெருவிழா சிறப்புமலர் வெளியீடு
* கிராமிய நடனம்
* சிறப்பு விருந்தினர்கள் உரை
* புத்தாக்க நடனம்
* வில்லிசை
* கலைவிருது பெறுவோர்-
  - பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை (கலைஞானப்புரவலர்)
  - பேராசிரியர் விநாயகமூர்த்தி சிவசாமி (கலைஞானப்புரவலர்)
  - கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு (கலைவாருதி)
  - திரு.சுப்பிரமணியம் வில்வரத்தினம் (கலைவாருதி)
  - திருமதி ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன் (கலைவாருதி)
  - திரு.சிவகுரு.பராசசிங்கம் (கலைவாருதி)
  - திரு.மருதன் சுந்தையா (கலைவாருதி)
  - திரு.சி.இரத்தினசபாபதி (ஞானவாருதி)
* இசை நாடகம்
* நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### சாட்டி மாதா தேவாலய குருவின் ஆசி



உலக மனித வரலாற்றிலே மாண்புடன் வீறுநடை போட்ட தனிமனிதனாக இருந்தாலும் சரி, ஒரு சமூகமாக இருந்தாலும் சரி எதை எடுத்துக்கொண்டாலும் அவற்றுக்கென்று ஒரு கலாசாரம் உண்டு, கனிவான பண்பாடு உண்டு. இந்த கலாசாரத்தின் ஆழமான கருத்து வெளிப்பாடு தனிமனித வாழ்விலே, சமூகத்தின் வெற்றியிலே ஓர் உயிர்த்துடிப்பான ஒரு தாக்கத்தினை நடைமுறை வாழ்விலே நிகழ்த்தி இருப்பது மறக்கமுடியாத உண்மையாகும்.

இந்த கலாசாரம் மற்றும் பண்பாடற்ற மனிதன் மனிதனல்ல மாறாக கொடிய விலங்கிற்கு சமனானவன். ஆனால, இந்த கலாசார மேம்பாடு முழுமனிதனின் உயர்விற்கும், அவனது உடல், உள, ஆன்மீக வளர்ச்சிக்கும், முழுமனித விடுதலையை நோக்கிய வளர்ச்சிப்படிக்கும் வழிநடத்திச் செல்லும் உன்னத கருவியாகும். ஆகவே, இந்த அரிய பண்பினை அடைய கலாசாரம் அல்லது பண்பாடு உறுதியான துணையாகிறது என்பதைக்கூறி வாழ்த்துகின்றேன்.

**அன்புடன்அருட்பணி**
**ஸ்ரனி பீலிப் அமலமரித்தியாகிகள்**

### கலைகளைப் போற்றினால் கலைகள் வளரும்



ஒரு நாட்டிற்கு, அந்நாட்டின் பிரதேசங்களுக்குப் பெருமை சேர்ப்பன. நிலவளம், நீர்வளம், மலைவளம் , மிருகவளம் ,கனியவளம் மற்றும் கானகவளங்களாகும்.

இவையாவும் சிறப்புக்களே ஐயமில்லை. சிறப்பு வளங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக மதிக்கப்படுவது அங்கு வாழும் மக்களின் அகவளம்தான். இவ்அகவளத்தை வெளிப்படுத்துவன அம்மக்களால் போற்றப்படும் கலை, கலாசாரம், பண்பாடுகள்தான் இம்மக்களாற் போற்றப்படும் கலை, இலக்கியங்கள் மக்களின் வாழ்வுடன் பின்னிப்பிணைந்தவை. இக்கலை இலக்கியங்கள் போற்றப்பட வேண்டியன, காக்கப்படவேண்டியன.

'கல்வியைப் போற்றினாற் கல்வி வளரும்
வீரத்தைப் போற்றினால் வீரம் வளரும்
கலைகளைப் போற்றினால் கலைகள் வளரும்'

இக்கலை இலக்கியங்களைப் போற்றும் எமது வேலணைப் பிரதேச செயலர்,செயலக ஊழியர்கள் மற்றும் இப்பிரதேச மக்களின் இவ்விழா முயற்சி போற்றுதற்குரியது மகத்தானது மாண்புமிக்கது.

**ஆ.ராஜேந்திரன்,**
வலயக்கல்விப்பணிப்பாளர். தீவகக் கல்விவலயம். வேலணை.

### வல்லமைகள் நிறைய



கலைகளை, கலைஞர்களை போற்றுகின்ற விழாக்களினால் எங்கள் பண்பாட்டின் 'ஆத்மா' ஆக்கப்படுகின்றது, புத்துயிர்ப்பு பெறுகின்றது.

இடரான சமூகச் சூழமைவு வலிகள் அகல, அழகான சுதந்திரமான நாளை மலர, வல்லமைகள் தருகின்ற பொழுதாய் வேலணைப் பிரதேச செயலக சமூகம் எடுக்கின்ற கலாசாரவிழா அர்த்தம்பெற எல்லையிலா அன்புடன் வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் என்.சண்முகலிங்கன்**
அரசறிவியல் - சமூகவியல் தலைவர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### பெரும் மகிழ்வு தரும் நிகழ்வு



கலை, கலாசாரம் என்பன எம் வாழ்க்கையோடு இணைந்திருக்கிறது. இக் கலை, கலாசார முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றவர்களைப் போற்றுவது நமது தலையாய கடமையாகும். அந்தப் பணியினை செவ்வனே செய்துவருகின்ற எமது பிரதேச கலாசாரப் பேரவை சிறப்புக்குரியதாகும்.

தமிழர்கள் முற்சங்கங்கள் அமைத்து தமிழையும் கலை, கலாசாரத்தையும் பேணிப்பாதுகாத்து வந்தனர். இதே போன்று எமது பிரதேச செயலகம் அவ்வாறான செயற் பணியைத் தொடர்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம். அந்த வகையில் இவ்விழா சிறப்படைய எமது உள்ளங் கனிந்த வாழ்த்துக்களையும், நிறைவான ஆசிகளையும் அன்போடு தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள்,**
ஆதீன தர்மகர்த்தா, சிவன் தேவஸ்தானம், புங்குடுதீவு.

(49092) அனுசரணை: ரவிச்சந்திரன் [illegible] வட்டாரம், புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்தும் அழைப்பும்



திரு. திருமதி ஆனந்+சுகந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## ஆ.லக்ஷிகன்

தனது முதலாவது பிறந்த தினத்தினை 09.04.2006 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00மணி அளவில் அவரது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாட இருக்கின்றார். அவரை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறார்கள். அவரது அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பா குடும்பம், சித்தி, பெரியப்பா, பூட்டன், பூட்டாச்சி அத்தை, சித்தப்பாமார் மற்றும் உற்றார், உறவினர்கள் இறைவன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடனும், வளமுடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

551, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
அப்பா.

# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7496064 முதல் 7505991 வரை. சீட்டிழுப்பு இல. 226 திகதி 06-04-2006

### வெற்றி எண்கள்

8 4 2 6 4 8 சுப்பர் எண் 15

ஜக்பொட் பரிசு ரூ. 11,807,575/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 11,807,575/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 88 | 5,000/= | 440,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 849 | 500/= | 424,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8503 | 50/= | 425,150/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 84277 | 10/= | 842,770/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 86 | 1,000/= | 86,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 850 | 100/= | 85,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8431 | 20/= | 168,620/= |
| | | மொத்தம் ரூ. | 3,967,040/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,569,640/=

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 7501417-7-00 |
| களுத்தறை | 7496223-0-53 |
| அம்பாந்தோட்டை | 7497783-7-74 |
| பதுளை | 7498599-6-67 |
| நுவரேலியா | 7496211-9-57 |
| கண்டி | 7503144-7-01 |
| காலி | 7500067-3-74 |
| திருகோணமலை | 7499876-0-09 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 12,044,050/=

தொடர் இல. 6589092 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஏப்ரல் 10 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

## புனித வாரம் நாளை ஆரம்பம்

கொழும்புத்துறை,ஏப்.8

கிறிஸ்தவர்கள் அனுசரித்துவரும் தவக்காலத்தின் புனிதவாரம் குருத்தோலை ஞாயிறு ஆராதனைகளுடன் ஆரம்பமாகிறது.

அனைத்து கிறிஸ்தவ தேவாலயத்திலும் ஞாயிறு காலையில் குருத்தோலை ஆசீர்வதிக்கப்பட்டு பவனி, திருப்பலி, திருப்பாடுகளின் வரலாறு இறைவார்த்தை என்பன இடம்பெறும்.

(3-30)(24)

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.8

சர்வமத யோகா சனஸ்தாபனம் இருபாலருக்குமான யோகாசன வகுப்புக்களை நடத்தி வருகிறது.

சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

# சொல்லில் அடங்காத சோகமிகு 6 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்
31 - 08 - 1963



ஆண்டவன் மடியில்
12 - 10 - 2005

(தச்சந்தோப்பைப் பிறப்பிடமாகவும் தம்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட)

**அமரர் சின்னத்துரை சாந்தகுமார் (குமார்)**

காரிருள் சூழ்ந்து கனமழை பெய்யும் வேளையையா!
காற்றில் வந்த செய்தி கதிகலங்க வைக்குதையா!
காவேரி ஆறுபோல் கண்ணீர் பாயுதையா!
பார்தனிலே பவனிவந்த பண்பாளன் - குமாரரே!
உனதுயிரைக் காவலன் கவர்ந்து விட்டதேனோ?
அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்த் திகழ்ந்து
எங்களை வாழ்வித்த எமது அன்புத் தெய்வங்களே!
மனித வாழ்வில் புனிதப் பணிசெய்து சந்நிதிக் கந்தனின்
இனிய திருவடிகளில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத்தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிசெய்தவர்களுக்கும் எமது துயரில் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மரணச் சடங்குகளில் கலந்து அஞ்சலி செலுத்தியோர்களுக்கும் தபால் மூலமும், தொலைபேசி மூலமும், துண்டுப்பிரசுரமூலமும் இரங்கல் செய்தி தெரிவித்தவர்களுக்கும் ஆறுதல் கூறிய அனைத்து நெஞ்சங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துகொள்வதோடு, இன்று (08.04.2006) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்களை நினைந்துஉள்ளம் உருகி வேண்டி நிற்கும்...
மனைவி, பிள்ளைகள்,
தாய், தந்தை, மாமா, மாமி.

தம்பாலை,
அச்சுவேலி.
(45740) (27.17.15)

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10 - 07 - 1933



உதிர்வு
26 - 03 - 1999

**திருமதி வேலாயுதர் அன்னலட்சுமி**

திதி: 08.04.2006

ஏழு ஆண்டென்ன
ஏழு ஆயிரம் ஆண்டுகள்
சென்றாலும் அம்மா
உங்கள் நினைவுகள் என்றும்
எம் மனதை விட்டு அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'பிருந்தாவனம்',
கைதடி வடக்கு,
கைதடி. (49114)(32-17-15)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்**

மண் மகிழ
18.01.1942

மண் நெகிழ
08.04.2003

நெஞ்சுக்குள்ளே எம்மை வைத்து
நேசமூட்டி வளர்த்து வந்தீர்!
தஞ்சமாய் உம்மை நம்பி
தழைக்க வைத்தீர் பூமிதனில்
பஞ்சதன் மேல் தீயைப் போல
மனம் பற்றவிட்டு ஏன் மறைந்தீர்?
ஆண்டுகள் மூன்று ஆகிடினும்
ஆறிடாது உன் பிரிவுத்துயர்
மாண்டுபோனது உம் உடல்தான்
மறைந்திடாது ஞாபகங்கள்
வேண்டுகின்றோம் இறைவனிடம்
உமது ஆன்மா சாந்தி பெற!


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உசன்,
[illegible]

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
29 - 03 - 1926



மறைவு
09 - 03 - 2006

**தம்பிப்பிள்ளை பரமானந்தன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி)

அப்பனே! எங்கள் வாழ்வின் தெய்வமே! அன்பின் தந்தாய்!
செப்பிய செல்வம் தந்து சீருற வைத்தாய் எம்மை!
இப் புவி தனியே நம்மை உயர்நிலை யதிக்கி வைத்தாய்
ஒப்பிலா தெய்வம் நீயே - உன் திருவடி பணிவோம் என்றும்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (08-04-2006) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறுகின்றன. அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அச்செழு,
நீர்வேலி. (49116)(26-15-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்புக் கவுன்ஸிலை விரைந்து அமைக்க சபாநாயகரை கோருகின்றார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, ஏப்.08

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு அங்கத்தவர்களை நியமிப்பது தொடர்பாக யாருடன் பேசவேண்டுமோ அவர்களுடன் பேசி முழுமையாக அந்தக் கவுன்ஸிலுக்குரிய பிரதிநிதிகளை நியமிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டிருக்கின்றார்.

பொதுமக்களுக்குரிய வேலைகளை வழங்குவதற்குத் தேவையான பல்வேறு சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படாமல் தவறுகின்ற காரணத்தினால், அரசின் செயற்பாடு குறித்து பொதுமக்களுக்கு அதிருப்தி ஏற்படும் நிலைமையை அரசின் தலைவர் என்ற முறையில் தம்மால் பொறுத்துக்கொள்ளமுடியாது என்பதை சபாநாயகருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாம் நேற்றுமுன்தினம் அனுப் பிவைத்த கடிதத்தில் தெரியப்படுத்தியிருக்கிறார்.

இத்தகவல் ஜனாதிபதியின் செயலாளர் நேற்றுமுன்தினம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரசமைப்புக் கவுன்ஸிலை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம், தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றை உருவாக்க முடியாத நிலைமையை ஏற்படுத்தி நிர்வாகத்தில் பெரும் பாதிப்பை உண்டுபண்ணியுள்ளது என ஜனாதிபதி தமது கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

இந்த ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டதால் பொதுச்சேவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற பொது அபிப்பிராயம் கிளர்ந்துள்ளது. இதனால், நீண்டகாலமாகவே அரசின் செயற்பாடு குறித்து பொதுமக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருப்பதை ஜனாதிபதி கவனத்தில் கொண்டிருக்கிறார்.

''இந்த நிலையை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. அரசுத் தலைவர் என்ற முறையில் அரசின் பணி தடையின்றி முன்னெடுக்கப்படுவதற்காக அர்த்தமுள்ள நடவடிக்கைகளை நான் ஆரம்பித்துள்ளேன்'' - என்று ஜனாதிபதி தமது கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

''அரசமைப்புக் கவுன்ஸிலை இயன்ற விரைவில் முழுமையாக அமைப்பதற்கு யாருடன் பேசவேண்டுமோ அவர்களுடன் பேசி உரியவர்களை நியமிக்க அவசர நடவடிக்கைகளை எடுங்கள்'' - என்று சபாநாயகரைக் கோரியுள்ள ஜனாதிபதி இது தொடர்பாக சபாநாயகரின் பதில் இயன்றவிரைவில் கிடைப்பதைத் தாம் எதிர்பார்த்திருக்கிறார் எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

- இவ்வாறு ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்பு தெரிவித்தது. (உ)

## ஒரே இரவில் மூன்று திருட்டுகள்

கொழும்புத்துறை,ஏப்.8

யாழ்.கச்சேரி நல்லூர் வீதிப் பகுதியில் கடந்த வியாழனிரவு ஒரே நேரத்தில் 3 இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இப்பகுதியில் உள்ள மிக்சர் விற்பனை நிலையம்,பலசரக்கு விற்பனை நிலையம் மற்றும் தனியார் வங்கி நிறுவனம் என்பவற்றில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இரவுவேளை கதவுகளை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் பணம்,பிஸ்கட் வகைகள், பல சரக்கு கடையில் இருந்த பல பொருள்கள் உட்படப் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-30)

## தேர் வெள்ளோட்டம்

கொழும்புத்துறை,ஏப்.8

வண்ணை வைத்தீஸ்வரர் ஆலய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று பி.ப.4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் மு.ப.11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் புதன்கிழமை பி.ப.4 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் -

வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சண்டேஸ்வரர் உற்சவமும் இடம்பெறும். (எ-30)

## பேச்சுத்திறன் காண் வைபவம்

யாழ்ப்பாணம்,ஏப்.8

'எவர் சைன் கிட்ஸ் வேள்ட்' பாடசாலையின் பேச்சுத்திறன் காண் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள பாடசாலையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (3-202)

## வெளிவாரி மருந்தாளர் பரீட்சை பிற்போடல்

யாழ்ப்பாணம்,ஏப்.8

இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவிருந்த வெளிவாரி மருந்தாளர் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்றும் பரீட்சை நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும்- சுகாதாரசேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ)


## மாநகரசபை - யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் பக்க வடிகால் வேலைக்கு இக்ராட் 7 உம் அதற்கு மேலுள்ள தரத்திலுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலையின் பெயர்: | மீளளிக்கக்கூடிய வைப்புக் கட்டணம். | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் வற் 150.00 உட்பட |
| --- | --- | --- |
| புனித பத்திரிசியார் வீதி (இராஜசிங்கம் வீதியிலிருந்து கடற் கரை வீதி வரை) | 14,900.00 | 1,150.00 |

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி : 20.04.2006

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 21.04.2006

நண்பகல் 12 மணி வரை

கேள்விப் பத்திரங்கள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 21.04.2006

நேரம் : பிற்பகல் 2 மணி.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு **மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியிடப்பட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். அல்லது இதற்கென இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். கேள்விப்பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

**(சீ.வீ.கே. சிவஞானம்),**
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம். (சி-48749)


## மரண அறிவித்தல்

### செல்லப்பா பொன்னம்பலம்

(இளைப்பாறிய தபால் அதிபர், காரைநகர்)



காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் புது வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பொன்னம்பலம் 06.04.2006 வியாழக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் உமாதேவியின் அன்புக் கணவரும் அமரர் சேதுப்பிள்ளை, அமரர் தங்கமுத்து, அமரர் சின்னம்மா, அமரர் சதாசிவம் (முன்னாள் குடிசன மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்), இராசம்மா, பாக்கியம், கந்தையா (வவுனியா), இராமநாதன் (உமையாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், வவுனியா), அமரர் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் முருகேசு, அமரர் கார்த்திகேசு, அமரர் சரவணமுத்து (சுங்க இலாகா - மலேசியா), இந்திராணி (கொழும்பு), அமரர் இராமலிங்கம் (முன்னாள் இ.போ.ச. நேரக் கணிப்பாளர்), அமரர் தில்லையம்பலம், தவசோதி (வவுனியா), சுந்தரேஸ்வரி (வவுனியா), கணபதிப்பிள்ளை, சண்முகம் (ஆசிரியர், கலாநிதி ஆ.தி.ம.வித்தியாலயம்), அமரர் சிற்றம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், விமலராணி (அத்தியடி)யின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2006) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

புது வீதி,
காரைநகர். (49119)

தகவல்:
**ச.சண்முகம்** (மைத்துனர்)


## தூரிகையின் மணநாள் சேவைகள்

- ஃபேஷியல்
- இமைசீர் செய்தல்
- மணப்பெண் ஒப்பனை
- ஐசிங் கேக்
- திருமண அழைப்பிதழ், பலகாரப்பை அச்சிடல்
- சுவரலங்கார வேலைகள்
- இன்னும் பல சேவைகள்

இக் காலத்திற்கேற்ற நவீன பாணியில் கை தேர்ந்த கலைஞர்களின் கைவண்ணத்தில் பெற்றுக்கொள்ள...

**T.P:077 9691380**
**077 9143171**

தூரிகை
*மத்திய மகாவித்தியாலய வீதி,*
*நெல்லியடி.* (49117) (27)


## மரண அறிவித்தல்கள்

### முருகேசு கந்தையா

(முன்னாள் சுன்னாகம் ப.நோ.கூ.சங்க இலிகிதர்)

அராலி மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மாவிட்டபுரத்தில் வசித்தவரும் தற்போது திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தையா அவர்கள் நேற்று (07.04.2006) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் கமலாவின் அன்புக் கணவரும், அமிர்தரஞ்சினி (ஆசிரியை), ஜெயந்தினி, சுபாஜினி (பிரதேச செயலர், ஒட்டுசுட்டான்), குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசுவின் மாமனும், நடராசா (வவுனியா), சிதம்பரப்பிள்ளை (சங்கானை ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
22/3, புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
*நிரந்தர முகவரி:*
*பிரதான வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை.*

தகவல்:
**குடும்பத்தினர்** (49119)

### சின்னத்துரை அரசரத்தினம்



வட்டு.தெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இல.16, பாரதி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாவும் இல.9, தனிநாயகம் வீதி, கூமாங்குளம், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அரசரத்தினம் 03.04.06 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொற்கொடி தம்பதியரின் அன்பு மகனும் கனகவதியின் (முன்னாள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், செல்வரத்தினம் மற்றும் கந்தசாமி, குணநாயகி, சுந்தரமூர்த்தி ஆகியோரின் சகோதரனும் கிரிதரன், சியாமளா, தாரணி ஆகியோரின் தந்தையும் சின்னையா பொன்னு ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரின் இல்லத்தில் (கூமாங்குளம்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நெலுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கூமாங்குளம்,
வவுனியா. (49125)

தகவல்:
குடும்பத்தினர்

### செல்லையா சதாசிவம்

(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர் - கோண்டாவில்)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சதாசிவம் அவர்கள் நேற்று (07.04.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் புஸ்பலீலாவின் (மனோ) அன்புக் கணவரும் சாந்தரூபன், சிவரூபன், கஜரூபன் (ரூபன்), ஜலஜா (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்), வேணுஜா (ஸ்கந்தா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற நாகபூஷணி, தர்மலிங்கம், காலஞ்சென்ற குணபூஷணம், கனகபூஷணம் (இத்தாலி) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம், இராஜேஸ்வரி, தாஸ் (துரை), சற்குணபாலராஜா (இத்தாலி), காலஞ்சென்ற பத்மநாதன், பத்மாவதி, புஸ்பரத்தினம், சறோஜினிதேவி, ஞானமலர் (மலேசியா), அசோகநாதன், காந்திநாதன் ஆகியோரின் மைத்துனரும், மேகலையின் பாசமிகு மாமனாரும், கோமதனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.04.2006) சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெற்று அவரின் இல்லத்தில் இருந்து, பூதவுடல் தகனக்கிரிகைக்காக பொக்கனை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பீரகத்தி விநாயகர் கோயில்,**
**ஊரெழு மேற்கு,**
**சுன்னாகம்.** (49126) (27)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
கஜரூபன் (ரூபன்) - மகன்.
(நகைத் தொழிலகம்
பாரத் ஸ்ருடியோ வீதி, யாழ்ப்பாணம்.

### குமாரசாமி பத்மநாதன் (பத்தர்)



அல்வாய், மாலு சந்தியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் தற்போது இல. 467, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசித்தவருமாகிய கு.பத்மநாதன் (பத்தர்) அவர்கள் 06.04.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் கணவரும் நித்தியானந்தன், லலிதா, ராதா, ரஞ்சிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ரமணி, மகேஸ்வரன், சந்திரகுமார், சிறிதரன் ஆகியோரின் மாமனும் கோபிராம், கம்சிதா, கனுசா, சுஜீவன், ரம்சிகா, அனோஜா, நிரோஜன், சிந்து, ரஜீவன், கீர்த்திகன், கிரிசனா, தனுசிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ்.கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்.

*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
**077 6944389** (49129) (27)

தகவல்:
நித்தியானந்தன் (மகன்).
(நித்தியானந்தா நகைத் தொழிலகம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் சமுர்த்தி நிவாரண விநியோகம் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.8

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கு ஜனவரி, பெப்ரவரி,மார்ச் ஆகிய மாதங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதன்படி நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட யாழ். பல நோ.கூ.சங்கக் கிளைகளில் இன்றுமுதல் மூன்று தினங்களும்-

நல்லூர் பல நோ.கூ.சங்கக் கிளைகளில் நாளை ஞாயிற்றுக் கிழமை முதல் மூன்று தினங்களும் சமுர்த்தி நிவாரணம் வழங்கப் படும் என்று நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தினங்களில் நிவாரணம் பெறத் தவறுவோருக்குப் பின்னர் நிவாரணம் வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# மரியன்னை பேராலயத்தில் குருத்தோலை ஞாயிறு திருப்பலி

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ்.மரியன்னை பேராலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (குருத்தோலை ஞாயிறு) காலை 6.30 மணிக்கு முதலாவது திருப்பலி யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெறும்.

இரண்டாவது திருப்பலி காலை 8.30 மணிக்கும் மூன்றாவது திருப்பலி மாலை 5.15 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு குருக்கள் வாக்குறுதிகளைப் புதுப்பிக்கும் சடங்கும், திருத்தைலங்களை மந்திரிக்கும் சடங்கும் தொடர்ந்து திருப்பலியும் ஆயர் தலைமையில் நடைபெறும் என பேராலய பங்குத்தந்தை தெரிவித்துள்ளார். (எ-202)

# றோட்டறிக்கழக விருந்தினர் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ்ப்பாண றோட்டறிக்கழகம் ஐ.நா. அபிவிருத்தித்திட்டத்தின் நீதியை நாடும் செயல் திட்டத்துடன் இணைந்து ஒழுங்கு செய்துள்ள விருந்தினர் உரை நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர்கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் சிரேஷ்ட சட்டத்தரணி காலிங்கஇன்ததிஸ்ஸ 'மனித உரிமைகள்' என்ற தலைப்பில் நுகர்வோர் சுதந்திரம், பொதுநல வழக்குகள்போன்ற விடயதாணங்களில் உரை நிகழ்த்தவுள்ளார். (ஐ)

# சட்ட செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் (யு.என்.டி.பி) நீதியை நாடும் திட்டத்துடன் இணைந்து நடத்தும் சட்ட செயலமர்வு இன்று சனிக் கிழமை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணி முதல் இடம் பெறவுள்ளது.

இதில் குற்றவியல் சட்டத்தின் அண்மைய வளர்ச்சி என்ற தலைபில் கணனி குற்றங்கள், புலமை சொத்து குற்றங்கள் தொடர்பாக பிரபல சிரேஷ்ட சட்டத்தரணி காலிங்க இன்ததிஸ்ஸ உரையாற்றவுள்ளார்.

இந்தச் செயலமர்வில் பல்கலைக்கழக சட்டதுறை மாணவர்களும் சட்டத்தரணிகளும் மற்றும் ஆர்வலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். என்று யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் மகாலிங்கம் சுதர்சன் தெரிவித்தார். (ஐ)


MINISTRY OF CONSTITUTIONAL AFFAIRS & NATIONAL INTEGRATION

A Public Lecture on
Issues related to Individual rights
* Human Rights
* Public Intereot Litigation
* Consumer Rights

**By: Mr. Kalinga N.Indatissa**
(Attorney - at - Law)
Litigation

Date : 08.04.2006
Time : 4.00 p.m. - 5.30 p.m.
Venue : The Auditorium
Public Library, Jaffna.

(a joint venture of equal Access to justice project and the Rotary Club of Jaffna)

UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME UNDP
(49137)
(54-11-49)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் உயிரியல் ஆசிரியையும்
எமது வகுப்பாசிரியருமாகிய
திருமதி ட. செ. அரசரெட்ணம் அவர்களின்
அன்புத் தந்தை
**தம்பு செல்வராஜா** அவர்கள்

05.04.2006 அன்று அமரரானார்.அன்னாரின் ஆத்மார்சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
12E உயிரியல் உயர்தர வகுப்பு மாவணவர்கள்.
(49136)
(54-11-49)

# கவலை குடிகொண்ட...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளத்துக்கும் உடலுக்கும் நலமளிக்கும் விதத்திலேயே இப்பயிற்சி நெறிகள் அமைகின்றன.

உங்களது முகங்களைப் பார்க்கும் போது நீங்கள் கவலைகளுடன் காணப்படுவதை அவதானிக்கமுடிகிறது. ஆனால் வெளிநாடுகளிலும் உள்ள உங்கள் உறவினர்கள் உங்களைவிடக் கூடிய கவலை கொண்டவர்களாகவே காணப்படுவதையும் என்னால் உணரமுடிந்தது.

மனிதருக்கு உள்ளத்தில் நம்பிக்கை அவசியமாகும். நீங்கள் நம்பிக்கையுடன் வாழ முற்பட்டால் உங்களை நாடிவரும் தீமைகளும் தாமாக விலகிச்சென்றுவிடும். அத்தகைய கவலைகளைப் போக்கிக் கொள்வதற்கான வழியே தியானமாகும் - என்றார் ரவிசங்கர்.

ஆன்மீகக் குரு ரவிசங்கர் பங்குபற்றிய மகா சத்சங்கமம் நிகழ்வு நேற்று மாலை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. பெருந்திரளான ஆன்மீக ஆர்வலர்கள் இந்த சத்சங்கமத்தில் திரண்டு வந்து சுவாமி ரவிசங்கரிடம் ஆசிபெற்றனர். (ஐ-7-206)(22)

# கண்காணிப்புக் குழு....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனது நேர்மையான கருத்து என்னவென்றால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இந்தப் பிணக்கு நிலைக்கான எந்த ஒரு பொறுப்பையும் ஏற்காமல் தட்டிக் கழிக்கவே பார்க்கிறார் என்பது மட்டுமல்ல, அந்த முரண்பாட்டுக்குத் தீர்வைக்கண்டு அதற்கு முடிவொன்றைக் காண்பதற்காக இலங்கை வந்திருந்து தமது அதிகாரத்துக்கு உட்பட்ட முறையில் தீர்வொன்றைக்காண விசுவாசமாக முயற்சிப்போர் மீதே பிழையையும், பழியையும் போடவும், சுமத்தவும் முயல்கிறார் என்பதே எனது கருத்தாகும்.

''எனவே, இந்தத் தவறான கூற்றுகளை அரசியல் கட்சிகள் இனியும் எடுத்துக்கையாளாமல் இருக்க வேண்டும். எனவே, அதற்கு முன்னதாக எனது இந்தத் திருத்தத்தைப் பிரசுரித்து கண்காணிப்புக் குழுவுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.'' - என்று உள்ளது.


## வீடு விற்பனைக்கு

56, அம்மன் வீதி, கந்தர்மடத்தில் 2பரப்பு 14.45 குளி காணியுடன் கூடிய நவீனமுறையில் அமைக்கப்பட்ட பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. A/C அறைகள், நவீனகுளியலறை வசதிகள், வாகனத்தரிப்பிட வசதிகள் என்பவற்றுடன்கூடியது. NGO இற்கு ஏற்றது.

தொடர்புகளுக்கு: 0214590276 or 0776701293
(49143)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கு, பாம்புதூங்கியில் 6 பரப்பு காணியும், காளிகோயிலடியில் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773151395
0773151396
(49146)

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
**மெர்க்குரிப் பூக்கள்**
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30,2.30,6.30,9.00,(பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாகர்ஸ் சுன்னாகம்

விஜயகாந்த் நடித்த
**சுதேசி**
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

## நாதன்ஸ்சினிமா யாழ்ப்பாணம்

பரத், சந்தியா
நடித்த
**காதல்**
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்


# மரண அறிவித்தல்கள்

## யோசப் யுஸ்ரீன்



குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உரும்பிராயை விசிப்பிடமாகவும் கொண்ட யோசப் யுஸ்ரீன் அவர்கள் நேற்று (07.04.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் - சவுரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முடியப்பு, அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் றோசலின் (செல்லக்கிளி) அவர்களின் அன்புக் கணவரும் றோஸ்மலர், றெஜினா, மங்களம், றீற்றா ஆகியோரின் சகோதரனும் அப்புத்துரை, சின்னராசா, தங்கராசா, யோகராசா ஆகியோரின் மைத்துனரும் புஸ்பராணி, சித்திரா, பாவனி, றஞ்சி, எமில், வதனா, கொன்சன், யூலியற் ஆகியோரின் பாசமிகு தந்தை யும் அன்ரன், பாலா, லெக்மன், வடிவேல், லூசியா, றமேஸ், தர்சினி, குமார் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.04.2006) சனிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.30 மணிக்கு பூதவுடல் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். மைக்கேல் தேவாலய வீதி,
உரம்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
T.P.: 0776253329
(49140)

தகவல்:
செல்லக்கிளி
(மனைவி).

## திருமதி கிருஸ்ணபிள்ளை செல்லம்மா



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 426/3, கில்னர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை செல்லம்மா அவர்கள் நேற்று (07.04.2006) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை அவிர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் முத்துத்தம்பி, இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் குலசேகரம்பிள்ளை (கனடா), காலஞ்சென்ற இரத்தினாம்பிகை, காலஞ்சென்ற கைலாயபிள்ளை (மைசூர் அரிசி ஆலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அம்பிகாபதி, காலஞ்சென்றவர்களான உருத்திராபதி, நடராஜா மாஸ்ரர், தங்கம்மா அவர்களின் அன்பு மைத்துனியும் குமுதினி (ஜேர்மனி), பரணிதரன், கனகாம்பரம், தரணிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் சிதம்பரநாதன் (ஜேர்மனி), பாலராணி, செல்வமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியும் சைலோ (ஜேர்மனி), பினாகாஷ் (ஜேர்மனி), ஐங்கரன், குகாயன், கபிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

426/3, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(49144)
(54-11-49)

தகவல்:
பரணிதரன் (மகன்).

## வேலுப்பிள்ளை சிவசாமி

மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன் துறையைச் சேர்ந்த முன்னாள் விதானையாளர் வேலுப்பிள்ளை சிவசாமி நேற்று (07.04.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.04.2006) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நி.முகவரி:
வீரமாணிக்கதேவன்துறை,
மயிலிட்டி, காங்கேசன்துறை.
த. முகவரி:
1043, நாச்சிமார் கோயிலடி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(49135)
(54-11-49)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி லில்லி ஞானம்மா கோபாலன்



அரியாலை, ஆனந்தன் வடலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லில்லி ஞானம்மா கோபாலன் அவர்கள் 28.03.2006 செவ்வாய்க்கிழமை கனடாவில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் ஆனந்தன் வடலியைப் வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற கோபாலனின் (வைத்தியர்) அன்பு மனைவியும் மோகன்ராஜ், சுமதி, சுசிலா, சாரதா, சாந்தி, ஜெயந்தி, சரோஜினி ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பழைய சிலாபம் வீதியிலுள்ள W.Sபெனாண்டோ அன்சன்ஸ் Paller இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை(09.04.2006)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நீர்கொழும்பு சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
இல.35(59),கனல் வீதி,
நீர்கொழும்பு.
(49144)
(54-11-49)

தகவல்:
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## மாவட்ட மட்டக் கண்காட்சியும் விற்பனையும் - 2006 (09.04.2006, 10.04.2006)

வடக்கு - கிழக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மகளிர் அபிவிருத்தி நிலைய உற்பத்திப்பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும்.
இடம்: யாழ்/இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
காலம்: 09.04.2006, 10.04.2006
நேரம்: முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
(49011)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குத் தளபதிகள் வன்னிக்கு வர கடல் வழிப் பயண வசதி செய்க!

## நோர்வேயிடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை

கொழும்பு, ஏப்.8

ஜெனீவாவில் நடைபெற இருக்கும் அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக்கு முன்பாக கிழக்கில் உள்ள புலிகளின் பிரதேசத் தளபதிகள் பாதுகாப்பாக வன்னிக்குச் சென்று திரும்ப கடல் வழிப் பயணவசதி செய்யப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரியிருக்கின்றனர்.

கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் கிழக்கில் இருந்து புலிகள் தளபதிகளை கடல் வழியாக அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அனுசரணையாளர் களான நோர்வேயிடம் புலிகள் கோரியிருக்கின்றனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கொழும்பில் உள்ள நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இருக்கிறார்

சுவிற்ஸர்லாந்தில் அரசுத்தரப்புடன் நடத்தப்பட இருக்கும் அடுத்த சுற்றுப் பேச்சுக்கு முன்பாக புலிகளின் களத்தளபதிகள் பங்குபற்றும் மத்திய குழுக் கூட்டத்தை நடத்துவதற்குத் தமது தலைமைப் பீடம் ஏற்பாடு செய்துள்ளதாகவும் வன்னியில் நடைபெற இருக்கும் இந்தச் சந்திப்பில் கிழக்கில் உள்ள தளபதிகள் பங்குபற்றுவதற்கு வசதியாக கடல் வழிப் பயணத்துக்கு ஏற்பாடு செய்யுமாறும் அக் கடிதத்தில் தமிழ்ச்செல்வன் கேட்டிருக்கிறார்.

இலங்கை அரசுத் தரப்பு இதற்கு இணங்காவிட்டால் கடற்படையின் அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பதற்கு வசதியாகதாமாகவே தமது சொந்தக் கடற்படையின் உதவியுடன் கடல்வழிப் பயணத்துக்கு ஏற்பாடு செய்ய நேரிடும் என்றும் தமிழ்ச்செல்வன் அக் கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார் எனத் தெரிய வந்தது. (ஐ)

# முஸ்லிம் ஊர்காவலர் இருவர் வெலிகந்தையில் சுட்டுக்கொலை!

வெலிகந்தை குடாபொக்குணவில் முஸ்லிம் ஊர்காவலர்கள் இருவர் நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆதம்பாவா மற்றும் மொஹிதீன் பாவா ஆகிய இருவருமே கட்டுவன்வில என்ற கிராமத்திற்கருகே இரவுநேரக் கடமையை முடித்து, சேனபுர பொலீஸ் நிலையத்தில் துப்பாக்கிகளைக் கையளித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது சுடப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து படையினரும், பொலீஸாரும் இணைந்து அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையை தீவிரமாக மேற்கொண்டபோதும் சந்தேகத்திற்கிடமான எவரும் கைது செய்யப்படவில்லை.

பொலன்னறுவை, வெலிகந்தை எல்லைப்பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக வெலிகந்தை பொலீஸார் கூறுகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அவர்கள் நடத்தி வருகின்றனர். (ஐ-க)

# புலிகள் அதிர்ச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை ஆர்வலருமான வ.விக்னேஸ்வரன் திருகோணமலையில் வைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளதை மிகுந்த அதிர்ச்சியுடனும் கவலையுடனும் உங்களது உடனடிக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வன்முறையைச் சாராத ஜனநாயக வழிமுறையில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முன்னின்று உழைத்த இந்த மனிதாபிமானப் பணியாளர் கொல்லப்பட்டுள்ளமையானது தமிழர் தேசத்தையே துக்கத்திற்குள்ளாகியுள்ளது. திருமலை துறைமுக பொலீஸ் நிலையத்திற்கும் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்குமிடையில் உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மத்திய கிளையினுள் விக்னேஸ்வரன் நுழையும்போது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இலங்கை அரசாங்கத்தின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுபவர்கள் யாரோ அவர்கள் சூழ்ந்திருக்கும் ஓரிடத்தில் வைத்து இச்சம்பவம் இடம் பெற்றுள்ளமையினால் அவர்களது உடந்தையில்லாமல் இதனை எவருமே மேற்கொண்டிருக்க முடியாது என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. இலங்கை இராணுவத்தினது புலனாய்வு அமைப்பு மற்றும் அதனுடன் இணைந்தியங்கும் துணை இராணுவக் குழுவுமே இச்சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளதை எமக்குக் கிடைத்துள்ள தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் திட்டமிடப்பட்ட வகையில் தொடர்ந்தும் கொலை செய்யப்பட்டுவரும் நிலையில் இலங்கை அரசாங்கமும் அதன் சட்டத்தை நிலைநாட்டும் நிர்வாக அமைப்புகளும் பாராமுகத்துடன் செயற்பட்டு வருகின்றன.

தற்போது நிலவுகின்றன கள நிலைமைகளின் அடிப்படையில் வைத்து நோக்குமிடத்து போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகப் பின்பற்றுவது எனவும் ஜெனீவாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் துணை இராணுவக் குழுக்களின் செயற்பாட்டை இல்லாது செய்வது எனவும் உறுதியளித்த இலங்கை அரசாங்கத்தின் வாக்குறுதிகள் அனைத்தும் அர்த்தமில்லாது போயுள்ளன.

போர்நிறுத்த ஒப்பந்த விதிகளை விசுவாசத்துடன் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொள்ளும் ஓர் அரசு மறைமுகமாக தனது இராணுவப் புலனாய்வு அமைப்பையும் அதனுடன் இணைந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களையும் பயன்படுத்தி விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களையும் தமிழ் ஆர்வலர்களையும் அனுதாபிகளையும் கொலை செய்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இது போன்ற நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்தினால் அவர்களது முழு ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகளுக்கு பேராபத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் இது எதிர்கால முயற்சிகளையும் சீர்குலைத்துவிடும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)(22)

# திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்து தேடுதல்களை நடத்தினர்.

சுட்டுக்கொல்லப்பட்ட விக்னேஸ்வரனின் மரண விசாரணை திருகோணமலை பதில் நீதிவான் செல்வி சுபாஷினி முன்னிலையில் நடைபெற்றதையடுத்து, சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைப்பட்டதாரியான விக்னேஸ்வரன் திருமணத்தின் பின்னர் திருகோணமலையில் குடியேறினார். இவருக்கு இரண்டு மகள்மாரும் ஒரு மகனும் உள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தமிழ்த் தேசியத் திற்கு ஆதரவாகவும் குரல் கொடுத்தவிக்னேஸ்வரன், பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் செயற்பட்டு வந்தவராவார். கடந்த ஆண்டு அன்பு வழிபுரத்திலுள்ள அவரின் வீட்டின்மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போது அவர் வீட்டில் இருக்கவில்லை.

கடந்த டிசெம்பரில் படுகொலை செய்யப்பட்டதமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இடத்திற்கு விக்னேஸ்வரனே நியமிக்கப் படவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# கோட்டபாய யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம்

கொழும்பு,ஏப்.8

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமாகிய கோட்டபாய ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார் என்று கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

விசேட விமானம் ஒன்றில் பலாலி விமானத் தளத்துக்கு நேற்றுக் காலையில் வந்த கோட்டபாய ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் அங்கு இராணுவ மற்றும் கடற்படை உயரதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தினர். பின்னர் அவர்கள் அங்கிருந்து மூன்று ஹெலிகொப்டர்களில் யாழ்.பொது விளையாட்டு மைதானத்திற்கு வந்திறங்கி 512 ஆவது படையணியின் தலைமையகமான யாழ். ஞானம்ஸ் விடுதிக்குச் சென்று படை அதிகாரிகளோடு பேச்சு நடத்தினர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஐ)(22)

# குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனீவாவில் இடம்பெற இருக்கும் அடுத்த கட்டப் பேச்சுகளை குழப்பி போருக்கான அறைகூவலை அநியாயப் படுகொலை மூலம் கட்டவிழ்த்துவிடும் அரசினதும் அரச படைகளினதும் அரச துணைப் படைகளினதும் பேரினவாதச் செயல்களை நாம் கடுமையாக எதிர்த்து நிற்கின்றோம். அநியாயமாக சுட்டுக்கொல்லப்பட்ட எம் தேசியப் பற்றாளனது இறுதிச் சடங்கு முடியும் வரை கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு, சோககீதங்களை ஒலிக்கவிட்டு எமது எதிர்ப்பை வெளிக்கொணருமாறு குடாநாட்டு மக்கள் அனைவரையும், தொண்டு நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் போன்றவற்றையும் பொது அமைப்பினராகிய நாம் கேட்டுக்கொள்கின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)(22)

# விக்னேஸ்வரன் கொலையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமரின் விவாத உரையையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம கொறடா ஜோசப் மைக்கல் பெரேரா அரசமைப்புக் கவுன்ஸில் இன்னும் அமைக்கப்படாமைக்கான காரணங்களைச் சபாநாயகரிடம் வினாவினார். அரசமைப்புக் கவுன்ஸில் அமைக்கப் படாததால் ஏற்பட்டுள்ள தேக்கநிலை காரணமாக எழுந்துள்ள பாதகங்களையும் அவர் விளக்கிக் கூறிக்கொண்டிருந்தார்.

அந்த வேளையில், சபையில் அமர்ந்திருந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் ஒன்றாகத் திடீரென வெளியே சென்றனர். சென்று ஓரிரு நிமிடத்தில் அவர்கள் அனைவரும் மண்டை ஓடுகளின் படம் வரையப்பட்ட - அவசரகாலச்சட்டத்திற்கும் 'மஹிந்த சிந்தனை'க்கும் எதிரான வாசகங்களுடனான - கறுப்புக்கொடி ஒன்றை ஏந்திய வண்ணம் கூச்சல்போட்டவாறு சபைக்குள் நுழைந்து சபாபீடத்தை நோக்கிச் சென்றனர்.

"சபாபீடத்திற்கு முன்பாக வந்து கூச்சல் போடவேண்டாம். எதுவாக இருந்தாலும் உங்களின் ஆசனங்களில் அமர்ந்து சொல்லுங்கள்!" - என சபாநாயகர், அவர்களைக் கேட்டார்.

கூட்டமைப்பினர் அது எதனையும் செவிமடுக்காது கோஷங்களை எழுப்பியவாறு சபாபீடத்திற்கு உள்ளே நுழைந்து சபாநாயகரின் மேசையில் பலமாகத் தட்டித் தொடர்ந்து கூச்சல் போட்டனர்.

சபாபீடத்திற்கு முன் வைக்கப்பட்டிருந்த செங்கோலை அவர்கள் தூக்கமுற்பட்டபோது படைக்கல சேவிதரும் சபை சிற்றூழியர்களும் ஓடிவந்து அதைத் தூக்கவிடாமல் சுற்றி வளைத்து அதற்குப் பாதுகாப்பு வழங்கினர்.

"நாடாளுமன்ற மரபு தெரியாமல் நடக்கும் உங்களைப் பார்த்து நான் வேதனைப் படுகின்றேன். நாடகம் பார்த்து நான் வேதனைப்படுகிறேன். நாடகம் நடிக்காமல் உங்களின் ஆசனங்களில் அமர்ந்து உங்களின் கருத்தைச் சொல்லுங்கள். அதுதான் சரியான முறை. அதையே நாம் விரும்புகிறோம்" எனக் கடுப்பாகக் கூறினார் சபாநாயகர்.

ஆனால், தொடர்ந்தும் சபாபீடத்திற்கு முன்நின்று "கொலை அரசே! உன் கொலை வெறியாட்டத்தை நிறுத்து!", "தமிழ் மக்களை நிம்மதியாக வாழவிடு!" - போன்ற கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தனர் அவர்கள்.

"மஹிந்த சிந்தனையும் அவசர காலச்சட்டமும் தமிழீழத்தை அழிக்கும் சதித்திட்டங்களா?" என்ற வாசகத்துடன் இரு மண்டை ஓடுகள் வரையப்பட்ட கறுப்பு நிறக்கொடி ஒன்றை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதனால், சபை நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போனது. சபாநாகர் காலை 10.10 மணியளவில் நாடாளுமன்ற நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு இடைநிறுத்தி வைத்தார்.

அப்போதும் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டத்தை நிறுத்தவில்லை. இதனால், ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சியினர் கடுப்பாகினர். இவர்கள் அனைவரும் ஆசனங்களை விட்டுக் கீழே இறங்கி வந்து ஆர்ப்பாட்டத்தை நிறுத்துமாறு கோரினர்.

"வடக்கு - கிழக்கில் நீங்கள் செய்கின்ற வேலைகளை நாடாளுமன்றத்தினுள் செய்யாதீர்கள்!" - என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்னாநாயக்க கூறினார்.

"இந்த ஆர்ப்பாட்டத்தைத் திருகோணமலையில் நடத்துங்கள். நாடாளுமன்றத்தினுள் நடத்தாதீர்கள். அவ்வாறு திருகோணமலையில் நடத்தினால் அதில் நாங்களும் உங்களுடன் இணைந்து கொள்வோம்" - என்றார் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய ரத்தின தேரர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம கொறடா ஜோசப் மைக்கல் பெரேரா மற்றும் தயாசிறி தயாரட்ன ஆகியோரும் கூட்டமைப்பினருடன் பேசினர். ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறு கூறினர்.

தயாசிறி தயாரட்ன ஆர்ப்பாட்டம் தொடங்கியது முதல் முடியும்வரை மிகவும் கோபமாகக் காணப்பட்டார்.

ஜாதிக ஹெல உறுமயவினர், ஜே.வி.பியினர், ஐக்கிய தேசியக் கட்சியினர் மற்றும் அரச தரப்பு உறுப்பினர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து கூட்டமைப்பினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

காலை 10.30 மணியளவில் சபாநாயகர் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டினார். திரும்பவும் கூட்டமைப்பினர் சபாபீடத்திற்குள் நுழைந்து கூச்சல் போட்டனர்.

இந்த நிலையில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீது விவாதம் நடத்தமுடியாமல் இருந்ததால் அப்பிரேரணையை வாக்கெடுப்பின்றி நிறைவேற்ற சபையின் இணக்கப்பாட்டைக் கோரினார் சபாநாயகர்.

இணக்கப்பாடு வழங்கப்பட்டதாக அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது எனப் பிரகடனப்படுத்தினார் சபாநாயகர். அத்தோடு நாடாளுமன்றம் மே மாதம் ஒன்பதாம் திகதி மீண்டும் கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-க)

# மரண அறிவித்தல்கள்

## வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் (விக்கி)



நயினாதீவு

(நிறைவேற்று அதிகாரி இலங்கை வங்கி, தலைவர் தமிழ் மக்கள் எழுச்சிப் பேரவை திருகோணமலை)

நயினாதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் திருகோணமலை அன்பு வழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் 07.04.2006 வெள்ளிக்கிழமை திருகோணமலையில் அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.பேரின்பநாதன் (மைத்துனர்)

6ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(49150)
(54-11-49)

## கனகசுந்தரம் சிவானந்தவேல் (பத்தர்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம்-நாகம்மா தம்பதியரின் மகனாகியா சிவானந்தவேல் அவர்கள் நேற்று (07.04.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இராசரத்தினம். (மைத்துனர்)

115, கச்சேரி நல்லூர் வீதி.

(49149)
(54-11-49)

## திருமதி இளையகுட்டி லட்சுமி (பழம்)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி லட்சுமி அவர்கள் நேற்று (07.04.2006) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08.04.2006) சனிக்கிழமை பி.ப. 5 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் புன்னாலைக்கட்டுவன் விலங்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.தர்மகுலசிங்கம் (கிரிசா ட்ரான்ஸ்போட்).

ஊரெழு கிழக்கு,

(49148)
(54-11-49)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org